தனிப்பிரதி விலை அணா 0-2-6.

கலா நிலயம்.

V.7. No.32. 16.8.1934.

m211,N28KN
N34.7.32
199182

KALANILAYAM

தனிப்பிரதி விலை அணு 0-2-6.

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

உள் நாடு—வருஷ சந்தா ரூ. 7 0 0
புற நாடு—வருஷ சந்தா ரூ. 9 0 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 7.] 1934 ஞூ ஆகஸ்ட் மீ 16உ [No. 32

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 497
2. தமிழ்ப் பாடம்—
நைடதம்—நளன்தூதுப் படலம். 499
3. இரவொன்றிற் பல பிழைகள் (அங்கம் 5. களம் 3.)
Goldsmith's—"She stoops to Conquer" 501
4. இரவீந்திரநாதர் கட்டுரைகள் (தபோவனம்)
W. E. அரியநாயகம் B.A., B.D., B. Ed, &
ஆஷாதேவி M. A. 503
5. காலம்—(பருவம்).
வித்வான் K. S. விசுவநாதசாஸ்திரி P.O.L. 504
6. கம்பராமாயணம் (வாலிவதைப் படலம்)
T. N. சேஷாசலம் B.A. B.L 504
7. சூளாமணி (குமாரகாலச் சருக்கம்) வித்துவான்
T. P. மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை M.A. B.L. 506
8. கர்ணன் மாண்பு
K. T. விஜயராகவாசாரியார் B. A. 508
9. நம்மாழ்வார் வைபவம் (6-ம் பத்து, 9-ம் தசகம்)
K. இராஜகோபாலாச்சாரியார் B. A. B.L. 510
10. வர்த்தமானம் 512

கலாநிலயம்

எத்தைக்கண்டு இச்சை கொள்வோம் 1.

மானுட வாழ்க்கை வழிவழி சிறந்து தழைத்திடுதல் வேண்டுமென்னும் நல்லதோர் ஆசைமேற்கொண்டு அன்னதற்குரிய அருநெறியும் ஆதாரமும் எங்குக்கண்டு எதனிற்பெறலாவோமென்று எக்காலும்சிந்தித்திருப்பார் சில உத்தமர். இந்தச்சிந்தனை எழுவது மதனைத் தெளிந்துகொள்ளும்படி முயல்வதும், பிறர் முயன்று தெளிந்த முடிவுகளில் பழுதுஉள்ளதென்று வாதிப்பதும் ஆகிய இன்னவைகளைக் காணுந்தோறும், இவைகளால் வேறெவ்வகைப் பயன் விளைந்தாலும் விளையாவிடினும், ஒன்று நிச்சயமாகின்றது.— நாம் விழையுமாறு நமது வாழ்க்கை இல்லை. இது எந்தநாளிலுமே அவ்வாறு அமைந்ததில்லையோ, அல்லது இந்நாள்தானெக்காரணத்தாலோ அவ்வாறுநடைபெறவில்லையோ —இந்தச்சரித்திரத்தைப்பற்றிஒன்றுமிங்கு ஆராய்ச்சி செய்யவேண்டிய அவசியம் இல்லை.

இம் மனிதவாழ்க்கையை உள்வாழ்க்கை என்றும் உடல்வாழ்க்கை யென்றும் இருகூறு படுத்திக் கருதுவது மரபு. உடல்வாழ்க்கை கெட்டதாயின், அதனை நோய்நிலை என்று அழைக்கின்றோம். இந்நோய்நிலையை நீக்கவல்ல கல்வியும் பயிற்சியும் வாய்ந்தவனே வைத்தியனாவான். உடல்நிலை நலிந்திருக்கு மொருவனுக்கு ஒருவன் தானறிந்த உதவியைச் செய்யத் தலைப்படும்போது அவன் கருதவேண்டியதுஒன்றே. பிணி யாது, அதனை நீக்குவது எங்ஙனம்? இப்பிணி வந்து பற்றுமுன், இருந்த சுகநிலைஎதுவென்றும், இனி இப்பிணி நீங்கியபின் அடையவேண்டிய சுகநிலை எதுவென்றேனும்; வைத்தியனுக்கும் சந்தேகம் இல்லை, பிணியாளனுக்கும் சந்தேகம்இல்லை. பிணி இன்னதென்று தேர்ந்தவகையில் ஒருகால் பிழை நேர்ந்தாலும், அல்லது, அப்பிணிக்காகக் கொடுத்த மருந்தும் அளவும் பிழைபட்டனவேனும், பிணியற்ற உடல்வாழ்க்கை அமைந்திருக்கவேண்டிய தன்மை இன்னது என்பதுபற்றிச் சந்தேகமேனும் வாதமேனும், விளையக்காண்கிலோம். உதாரணமாக, ஒருநோயாளிக்கு 105 டிகிரி சுரம்அடிக்கின்றது. இந்தச்சுரத்திற்குரிய காரணம் அறியாமட்டாமல் சில வைத்தியர் பிழைசெய்யலாம்; அறிந்தும் அதனிற்குக் கொடுக்கவேண்டியமருந்தில் பிழைசெய்யலாம். இப் பிழைகளுக்கிடையே அப் பிணியாளன் பிழைக்காமல் போகலாம், அல்லது அவனது ஆயுள் பலத்தால் ஒருகால், அவனுற்ற பிணிக்கும் அதனோடு உறவுகொண்ட வைத்தியர் பிழைகளுக்குந் தப்பிப்பிழைத்தாலும்பிழைத்துவிடலாம்; அதுவேறுவிடயம். மற்று, இச்சுரம்நீங்கியபின், உடலின்வெப்பம்இருக்கவேண்டிய அளவு எதுஎன்பதில் சந்தேகங் கொண்டு, 107டிகிரியே இருக்க வேண்டுமென்று சிலரும், 90 டிகிரி இருக்கவேண்டுமென வேறுசிலரும் வாதங்கள் செய்ய நாம் எவ்விடத்திலேனும் எக்காலத்திலேனுங் கண்டிருக்கின்றோமோ. நோய்நீங்கியபின் இவன் உடலினது வெப்பம் 98.4 டிகிரியே இருக்கவேண்டுமென்பது சாதம். ஆதலின், உடல் வாழ்க்கையில் நேர்நிலை இன்னதென்பதும் நோய்நிலை இன்னதென்பதும் யாதும் ஐயமின்றி யாவருக்குந் தெரிந்து நிற்கின்றது.

மனிதவாழ்க்கையின் மறுகூறுகிய உள்ளத்தின் திறத்தில் இந்தநிச்சயத்தை ஏற்படுத்திக்கொள்ளவேண்டுமென்கின்ற அவசியத்தையேனும்கருதுகின்றவர்மிகச் சிலரே. ஆதலாற்றான் எங்கெங்கும் எண்ணிறந்தோர் தாமும் தாங்கமாட்டாத அல்லல்பட்டுப் பிறரையும் பொதுப்பொதுத் தொகுதிகளாகவுந் தனித்தனியாகவும் அல்லலுட் படுத்துகின்றனர். ஏனெனில், மனிதவாழ்க்கைக்குரிய உள்ளத்தின் அமைதியைப் பற்றியவோர் சிந்தனையை மேற்கொள்வதில்லை.மேற்கொண்டு அதனை ஒருவாறு நிச்சயஞ்செய்வார்களாயின், பிறகு அந்நிலையை அடைவதற்குரியவழிகளை ஆராய்தல்பயன்படும்.அந்த நிலையைத்தான் நம்கவிவரர் இரவீந்திரநாதர்,'மனுஷத்வம்' என்று தம் கட்டுரையில் பெயரிட்டுக் காட்டினர். அதனையடையும்நெறி அவர் அங்கு,"உத்திஷ்டத, ஜாக்ரத, பிராப்யவரா நிபோதத, க்ஷுரஸ்ய தாரா நிஷிதா துரத்யயா துர்க்கம் பதஸ்தத் கவயோவதந்தி" என்று எடுத்துக்காட்டியுள உபநிடத வாக்கின்படி மிகவும் கடினமானதாக இருக்கலாம். ஆயினும் அவ்விடயம் வேறு. அந்நெறியிற் சென்று சேரநிற்கின்றபதவியைப்பற்றிச் சிந்திக்கவேண்டுவதன் அவசியத்தைத்தான் இங்கு வற்புறுத்துகின்றோம்.

இம்மானுடவாழ்க்கையின் பயன்என்ன, பொருள்தான் என்ன! இந்தக் கேள்வி யெழுமாயின், எழுந்து ஒருவகையில் விடையும் வருமாயின், பிறகு அப்பொருளிற்கு ஏற்ற பயனை அடைந்துகொள்ள வகை தேடுவது ஒருவாறு எளியதாவதுடன், இதற்கு மாறான முயற்சிகளின் ஆரவாரங்களும் அடங்கிவிடும். "ஈதல் இசைபட வாழ்தல் இது வல்லது ஊதியம் இல்லை உயிர்க்கு" என்றும், "அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது" என்னவும் வழங்கப்பெற்றிருக்கின்ற அத் திப்பியக் குறள்களின் ஒளியே நம்முடைய வாழ்க்கையை நேரிய நெறியில் நடத்துவதற்குப் பெரும்பாலும் போதும். ஆயினும், அன்ன நன்மொழிகள், உள்ளப்பிணி யற்ற வாழ்க்கையில் இயற்கையாகவே இருக்குமொருபாக்கியம் செய்திருப்பவர்தம் ஊக்கத்தை உதவும் உண்மையனவாய் நிற்குந்தரத்தனவே யாமன்றி ஏனையோர் மனத்திற்கு எட்டுமென்றெண்ணல் எளியதன்று. அன்னவர்உரைகளே தமக்கு உறுதியாமென்றுகொண்டு ஒழுகுகின்ற தூய மரபினை இக்காலத்து மனிதர் தொலைத்துவிட்டு நிற்கின்றனர்; ஆதலின், அம்மரபினிற்கு அயலாகிய மாந்தர் எந்நிலையுற்றிருக்கின்றனரென்பதையும், அந்த நிலையினின்று உய்ந்து கரையேற எவ்வகை முயல்கின்றனர் என்பதையும், முயன்று அவர் கரையேறி நிற்க நினைக்கின்றஓர் பதவியை எவ்வண்ணமாகச் சித்தரித்து அமைத்துக்கொள்கின்றன ரென்பதையும் கருதுவது இக்காலம் சாலப் பயன்தரும். கல்சரைப்பற்றிய கட்டுரைகளே, இவ்வாராய்ச்சி பின்தொடர்ந்துவருவதன் அமைதியை அறிந்துகொள்வது அருமையன்று.

அமெரிக்காவில் தற்காலம் வில் டூரான்ட் (Will Durant) என்று ஒருவர் இருக்கின்றார். இவர் எல்லாக் கலைகளுடனும் எல்லாச்சாத்திரங்களையும் கற்று வல்லவர். அறிவினது நுட்பமும் அதிகம் வாய்ந்தவர். அதனோடு, உலகவாழ்க்கை உயரவேண்டும் என்னும் ஊக்கமும் ஆர்வமும் மிகவுடையவர். அரசியல் வாதங்களிலும் சீர்திருத்த இயக்கங்களிலும் கலந்துழன்று தம் கருத்தினைக் கட்டழித்துக்கொள்ளாதவர். இவர், "வாழ்க்கையின் பொருளும்பயனும் என்ன"வென்று கேட்டு, இவ்வுலகின்கண் இன்று மிகப் பிரசித்தமாகியிருக்கின்ற, மகாத்மா காந்தி, ஜோவர்லால் நெஹ்ரூ, பர்னார்ட் ஷா, ஹாவ்லக் எல்லிஸ், ஜான்கூபர் பாய்ஸ் முதலான பல பேருக்குக் கடிதங்கள் எழுதி அன்னவர்தம் கருத்துக்களைத் திரட்டி வெளியிட்டிருக்கின்ற புத்தகம் ஒன்று இப்பொழுது பிரசுரமாகியிருக்கின்றது. அவர் இக் கேள்வியைக் கேட்டு எழுதியிருக்கிற கடிதத்தை இதன்கீழ் மொழிபெயர்த்துக் கொடுக்கின்றோம்:—

" அன்புடைய ஐயா,

உங்கள்வேலையைச் சற்று ஒதுக்கிவைத்து என்னுடன் தத்துவவிளையாட்டுச் சற்றே விளையாடச் சம்மதிப்பீரோ?

ஓயாமல்கேட்டுக்கேட்டு ஒருபோதும் பதிலோ சொல்லமாட்டாத ஒரு கேள்விக்குப் புறங்காட்டி யோடிவிடாமல் அதனை நேர்முகமாகச்சந்தித்துக் கைகலக்க முயலவேண்டுமென்னும் எண்ணமுடையவனாக இருக்கின்றேன். இது செய்யவேண்டுமென்பது எக்காலத்திலும் இக்காலம் மிகவும் அவசியமாயிருக்கின்றது. சிறிதேனுங் காரியத்தில்கலக்காமல் கருத்தளவே நின்றுவிடுகின்ற சில தத்துவ சாஸ்திரிகளால்மட்டுமே இக்கேள்வி இதுகாறும் கைகொள்ளப் பட்டிருந்தது. அதன்முடிவாக, புத்தியானது, தன்னையே தற்கொலைசெய்துகொண்டகாட்சியையேகாண்கின்றோம். நுணுகிநுணுகி ஆராய்ந்துவளர்ந்த ஓர் அறிவானது வாழ்க்கையைப் பொருளும்பயனும் இல்லாமற்போம்படி அழித்துவிட்டது. சீர்திருத்தக்காரர்களும் ஏனையகருத்தாளர்களும், அறிவின்வளர்ச்சியும் பெருக்கமும்வேண்டி வேண்டிப் பிரார்த்தனைகள்செய்ததெல்லாம், மனிதர் இதுகாறும் நம்பியிருந்த சிலவற்றினை மயக்கமறச்செய்து அதனாலே இம்மானுட இனத்தின் உணர்வும் ஊக்கமும் உடைந்து கிடக்கின்ற ஓர்நிலையையே இன்று எய்துவித்தது.

இன்று......ஜனநாயகம் என்று கொண்டாடப்படுவது எல்லாம்இலஞ்சத்தின்கொள்ளையாகக் கூத்தாடுகின்றது. புதிதுபுதிது கண்டுபிடிக்கப்படுகின்ற ஒவ்வொரு சாதனமும் வலியோர் மெலியோரை இன்னும்அதிகமாக நலிவதற்குஉரிய கருவியாகவே அமைகின்றது. பொதுஜனநன்மையைநாடவொட்டாமல் மனிதர்க்கிருக்கின்ற பேராசை என்னுமப் பெரும்பேய் தடுக்கின்றது. முன்னொரு காலத்தில், நமது சின்னாள் வாழ்க்கைக்கு ஆறுதலும் ஆதாரமுமாக இருந்ததும், நம் துயரத்திற்கும் துன்பத்திற்கும் ஓர் அடைக்கலமாக அமைந்ததும் ஆன அக்கடவுள் இப்பொழுது களத்தினின்று அறவே நீங்கிவிட்டது; தூரதிருஷ்டிக் கண்ணாடியும் அணுதரிசினிக் கருவிகளும் இப்பொழுது கடவுளைக் காட்டுகின்றதில்லை. மனிதப் பூச்சிகளின் மாரடிப்பே எங்கெங்குங்காண்கின்றோம். தோல்வியும் மரணமும் தவிர வேறொன்றும் நிச்சயமில்லை—இறுதித் தூக்கத்திலிருந்து எழுந்திருப்பது எந்நாளும்இல்லையேபோல் தோன்றுகின்றதே.

இவைகளைப் பார்க்கும்போது, "உண்மை"யைக் கண்டுபிடித்ததே இந்த மானுட சரித்திரத்தில் செய்யப்பட்ட பிழைகளிலெல்லாம் மிகப் பெரியதென நினைக்கவேண்டியிருக்கின்றது. இந்த உண்மையின் அறிவானது நம்மை எதனின்றும் விடுவிக்கவில்லை. நமக்கு [illegible] யாமைகளிலிருந்தும், நம்மைக் கா[illegible]ருந்த கட்டுப்பாடுகளிலிருந்துமே நம்மை அது விடுவித்ததுஎன்பதுதான் நேர். இந்த விடுதலையைப் பாராட்டுவதாயின் பாராட்டலாம். இதுவோ நம்மைச் சந்தோஷப்படுத்தியதில்லை. ஏனெனில், கண்டுபிடித்த இந்த உண்மையானது அழகாக இல்லையே; இத்தனை ஆர்வமுடன் பின்தொடர்வதற்குரிய மதிப்புவாய்ந்ததும் அன்று. இதனைக் கண்டுபிடிக்கவோ நாம் இத்தனைப் பாடுபட்டோம் என்பதைச் சிந்திக்கும்பொழுதெல்லாம் ஆச்சரிய மதிகரிக்கின்றது. ஏனெனில், இன்றைக்குக் கிடைத்த சிற்றின்பங்களுக்கும் நாளைக்கு எதிர்பார்த்திருக்கும் அற்ப நம்பிக்கைக்கு மல்லாமல் உயிரோடிருப்பதற்கு வேறெவ்விதக் காரணமும் காணமாட்டாமல் ஆக்கிவிட்டதே இவ்வுண்மை.

பூதசாஸ்திரச்சாதனைகளும் தத்துவஆராய்ச்சியின் முடிவுகளும் நம்மைக்கொணர்ந்து இந்த நடுச்சந்தியில் நிறுத்திவிட்டன. எத்தனையோபல ஆண்டுகளாக தத்துவநூல்களில் ஆசை மிக வைத்திருந்த நான், இனி வாழ்க்கைக்கே திரும்பிவந்து, வாழ்ந்தும் வழிவழி சிந்தனையில் ஆழ்ந்தும் பழகியிருக்கின்ற நீர், எனக்கிதனை விளக்கி உதவவேண்டுகின்றேன். எண்ணுவதோடு நின்றுவிட்டவர்களைவிட வாழ்ந்தும் பார்த்து அனுபவித்தவர்களுடைய முடிவு வேறாக இருக்கலாம். ஆகையால் தயைசெய்து இந்தக் கேள்விகளுக்கு விடையெழுதி யனுப்பவும்—

1. உயிர்வாழ்க்கையென்பதால் நீர் கொண்ட பொருள் யாது?

2. நும்மைஇவ்வாழ்க்கையி னூடாடும்படிசெய்துவைத்திருப்பது யாது?

3 சமயச்சார்பான உணர்வு உமக்குஏதேனும் இருக்குமாயின், அது உமக்கு எவ்வகை உதவி செய்கின்றது?

4. நும்முடைய ஊக்கமும் முயற்சியும் எதனின்று பிறக்கின்றன?

5. நீர் வருந்தி முயல்கின்றவைகளின் நோக்கமேனும் அதனால் அடையவேண்டும் என்று விரும்புகின்ற முடிவேனும் என்ன?

6. ஆறுதலும் அமைதியும் அகத்துறு இன்பமும் எதனிற் காண்கின்றீர்?

7. இறுதியாக நீங்கள் வேண்டுகின்ற கருவூலம் (Treasure) எங்கே இருக்கின்றது.

சுருக்கமாகத்தான் இதற்குப் பதிலெழுதக்கூடுமானால் அவ்வாறு செய்க. அல்லது விரிவாக எழுதுவீர்களானால் நன்றே. உங்கள் சொல் ஒவ்வொன்றையும் பொன்போல் போற்றுவேன்."

இப்படிக்கு
வில் டூரான்ட்

நம்முடைய வாசகர்களில் ஒவ்வொருவரும் இக் கேள்வி தம்மையும் கேட்கப்பட்டதாகக் கருதிக்கொண்டு அதற்குத் தாம் என்னவிடை தந்திருப்பார் என்பதைச் சிறிது சிந்தனைசெய்து வைத்திருப்பாராயின் மேல் இனி நாம் வரைவன சாலப் பயன்தரும்.

ஜீ
M211, N2?K1
N34.732
199182

தமிழ்ப்பாடம் 132.

நைடதம்—நளன்தூதுப் படலம்

[485-வது பக்கத் தொடர்ச்சி]

திருத்தகு செவியிடைச் சிவையி னூடுற
வுருக்கிய செம்பினை யூற்றி னாலென
மருத்துவன் றீமொழி கேட்டு மன்னர்கோன்
கருத்தழிந் தாருயிர் கலங்கி னானரோ. 24

(உரை) மன்னர் கோன் - அரசருக்கு அரசனாகிய நளன், மருத்துவன் - இந்திரனது, தீமொழிகேட்டு - கொடிய வார்த்தைகளைக்கேட்டு, திருத்தகு - அழகிற் சிறந்த, செவி இடை-தன் காதினில், சிவையின்-கொல்லனது உலையின் மூக்கில், ஊடுஉற-உள்ளேபொருந்த, உருக்கிய செம்பினை - உருக்கிய செம்பை, உற்றினால் என ஊற்றியதுபோலவே, கருத்து அழிந்து - நினைவு அழிந்து, ஆர் உயிர் கலங்கினான்-அருமையான உயிர் கலங்கலானான். (அரோ - அசை.)

குறிப்பு:—காய்ச்சியசெம்பினைச் செவியில்விட்டால் அதனால் உண்டாகும்வருத்தம் எத்தனையோ அத்தனை துன்பம் இந்திரன்மொழி விளைத்தது என்று காய்ச்சிய செம்பிற்கும் இந்திரன் சொல்லிற்கும் பயனால்ஒப்புமை தோன்றச்சேர்ப்பதால் இது பயனுவமையணி ஆகும். (5-443)

குருமணி மேகலைக் குவளைக் கண்கொலோ
பொருமதன் பகழியோ பொய்ம்மை தீதெனுந்
தருமமோ வுயிர்நிலை தளர்ந்து வாடுமென்
மருமமீ தூன்றிய வாளிற் போழ்வதே. 25

(உரை) குரு - நிறம்பொருந்திய, மணி - இரத்தினங்கள் இழைத்த, மேகலை - மேகலை என்னும் ஆபரணத்தையணிந்த தமயந்தியின், குவளை - நீலோற்பலத்தைப் போன்ற, கண்கொலோ-கண்களோ? (அல்லது) பொரு - போர் செய்கின்ற, மதன் - மன்மதனுடைய, பகழியோ - அம்புகளோ ? (அல்லது) பொய்ம்மை-உரைத்த மொழியிலிருந்து பிறழ்தல், தீது எனும் - பாவம் என்னும், தருமமோ - அறமோ? (இவைகளில் எது), உயிர்நிலை தளர்ந்து - உயிர்நிலையானது நெகிழ்ந்து, வாடும் - வாடுகின்ற, என் மருமம் மீது - என்னுடைய மார்பின்மீது, ஊன்றிய - அழுத்திய, வாளில்-வாளைப்போல், போழ்வது - இப்பொழுது பிளக்கின்றது, (அறிகிலேனென்று நளன் தன்னுளே எண்ணி எண்ணி நைகின்றான்).

விரிவுரை:—ஆவிசோர்கின்றனன் நளன். மார்பிலே ஏதோவாளைப்போல் அழுத்திப்பிளப்பதொரு துன்ப உணர்ச்சி அவனுக்கு உண்டாகின்றது. ஆனால் அவ்வாறுபிளப்பதுஒன்றும் அவன்கண்களுக்குத் தோன்றுதாகையால், யாவதாய் அது இருத்தல் கூடுமென்று ஐயுறுகின்றான். அச்சமயம் தன் கண்ணிற்குத்தென்படாமலே மார்பைப்பிளக்கவருவது, தமயந்தியினது பார்வை, மன்மதன் பாணம், மெய்ம்மைத் தருமம், ஆகியஇம்மூன்றினில் ஒன்றாயிருக்கவேண்டும் என்று அவன் ஆராய்வதாகக் கூறுகின்றது இச்செய்யுள்.

இந்தப் பொருந்தாஒரு தூதுத்தொழிலில்போய்த் தான் தமயந்தியின்முன் நிற்கவும், ஈதுணராத அவள் காதலால் தன்னைக் காணவேவந்துளன் என்ற களிப்பினோடு முகமலர்ந்து நோக்குங்கால் 'தமயந்தி, நீ இந்திராதியரை மணக்கவேண்டும்' என்று விளம்பியவுடன், திகைப்பும் நாணமும் ஒரு சிறு வெகுளியும், யாவற்றிற்கும் மேல் துன்பமும், கலந்த நிலையினளாய் யாது முறையாமல், "அரசே, ஒத்தகாதலால்மணப்பான்வந்தனை என மகிழ்ந்த பேதையேன்யான் கையறவெய்திமாழ்க என்னைப் பிறர்வய மாக்குதல் உனக்கேனு மெனக்கேனும் பெருமையாமோ; கொடியோய் இது தகவோ" என்னும் பொருள்தோன்ற அவள் பிற்றைநாள்

தன்னைப் பார்க்கவிருக்கும் பார்வையைத் தன்மனத்திஞல் நினைக்க, அம் மனத்தோற்றமே இப்பொழுது நளனுடைய மார்பைப் பிளக்கின்றதென்பது முதலடியின் கருத்தாகும். அநங்கன் எய்யும் பாணங்களும் கண்ணுக்குத் தோன்ருவாகையால் அவைதாம் பிளக்கின்றனவோ என்னக் காதலின்மிகுதியால் விளம்புகின்ருன். பிறகு "இத்தூதிற்கு நான் உடன்பட்டேன் என மறுத்தாலென்" என்றவோர் நினைவு தூண்ட உடனே, "இவர்கேட்குமிது நன்னெறியலதாயினும் சொன்ன சொல்மறுத்தல் எஞ்ஞான்றும் அறமன்று' என்னும் நீதியை நினைத்து, "ஐயகோ! என், வாய்மை வண்மை என்னும் அறங்களுக்கே யான்இன்று வாளா ஆளாகவோ" என மாழ்கிஞன் என்பது மூன்ருவது அடியின் கருத்து.

கண்ணே, பகழியோ, தருமமோ, வாள்போலபோழ்கின்றது என்று உரைக்கும் இது ஐயவணி ஆகும் ஒன்றினைக்குறித்து அதுவோ இது என்னும் சந்தேக வாசகத்தால் செப்புவது ஐய அணியின் இலக்கணம். "குவளையோ கயலோ வண்டோ இவள் முகத்தினில் பிறழ்வதே" என்று ஒருத்தியின் கண்ணை வருணிப்பதாயின் அது ஐய அணி. இதனையே, "இவள் கண்கள் குவளையைப்போலும், கயலைப்போலும் வண்டினைப்போலும் இருக்கின்றன" என்போமாஞல் இது உவமைஅணிஆய்விடும். உண்மையில், ஐயஅணி, உவமையணியின்ஒருவகையேயாகும். கயல்போல,குவளைபோல வண்டுபோல என, போலமுதலிய உவமஉருபு ஒன்றுமே கொடுக்காமல், அதற்குப்பதிலாய், கயலோ குவளையோ வண்டோ என ஐயப்படும் வாசகத்தில் உரைப்பதொன்றே வேறுபாடாம். இறுதியில் கயல் குவளை வண்டு ஆகிய இவைகளைப்போல் அவள்கண்கள் இருந்தன வென்பதே அவ் விருவகை வாசகங்களின் ஒரே கருத்தாகும். ஆகையால் ஐயஅணியை ஐய உவமையணி என்றுங் கூறலாம். ஐயவணியை, வடமொழியில் சந்தேகாலங்காரம் என்று கூறுவார். ஐயவணியும், பிராந்திமதாலங்காரம் என்னும் மயக்க அணியும் இரு பொருள்களுக்குள்ள ஒப்புமையைக் குறிக்கும் வகையில் ஒக்குமெனினும் இவ்விரண்டிற்கும் வாசக அளவில் சிறிது பேதமிருக்கின்றது. இதுவோ அதுவோ என ஐயப்படும் வாசகத்தால் ஒப்புமையைக்குறிப்பது ஐய அணி. இதுதான் அது என்னும் நிச்சயவாசகத்தால் ஒப்புமைதோன்ற அமைப்பது மயக்கஅணி. வானத்தில் எழுந்தமுழுமதியைத் தீம்பால் கவளமென நினைத்து வேங்கடமலையிலுள்ள யானைகள் தம்துதிக்கையை நீட்டின(6-558)என அஷ்டபிரபந்தத்தில் வந்திருப்பதும், தாமரை மலரென்றெண்ணி மாதர்தம் முகத்தில் வண்டுகள் பாய்ந்தன வென்று நளவெண்பாவில் (5-524) வந்திருப்பதும் மயக்க அணி யாகும். ஒன்றற்கொன்று உவமையாவதை இவ்விதம் மயக்கவாசகத்தில்கூறுவதால்அதனை மயக்க உவமைஅணி என்றும் அழைக்கலாம்.

இவ்வண்ணம் ஒப்புமைகாட்டும் குறிப்பினல் வருவதே யன்றியும் ஒரு பயனை விளைவிக்கவல்ல இரண்டு மூன்று காரணங்களும் ஒருங்கே யிருந்தன என்று சேர்த்துச் சொல்லவேண்டும் நயத்தையும் 'இதுவோ அதுவோ' என்ன வேறுபடுத்துவதுபோன்ற வாசகத்தால் சாதிக்கலாம். இந்தச் செய்யுளில், கண்ணும் பகழியும் தருமமும் எல்லாம்சேர்ந்து நளனது மார்பைப் பிளக்கின்றன வென்பதே பொருளாயிருக்க, அவைகளில் 'எதுவோ' என்னும் வாசகத்தால் அப்பொருள் சாதிக்கப்படுகின்றது. "அரக்கர்செய்தபாவமோ, அல்லது நல்லவர்செய்த தவமோ, மந்தரை வந்துதோன்றிஞள்', என்னு மிடத்தில் அவர் பாவமும் இவர் தவமும் ஆகிய இவ்விரண்டும் சேர்ந்து கூனியின் தோற்றத்திற்குக்காரணமாயின என்னும்பொருளை ஐயவணி எய்துவிக்கின்றது.

குறிப்பு:-மணிமேகலை, என்பது மணிகளால்இழைக்கப்பெற்ற மேகலையை அணிந்தவள் என்று இடையிலும் கடையிலும் விரியுமாகையால், மூன்றும் வேற்றுமை உருபும்பயனும் உடன்தொக்கதொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை.

குவளைக்கண், என்பது குவளைபோன்ற கண் என விரியும். ஆகையால் உவமத்தொகை—வருமொழிமுதல் வல்லினமெய் மிகுந்தது.

வாளில், என்பதிலுள்ள 'இல்' என்பது ஐந்தாம் வேற்றுமை உருபு; ஒப்புப்பொருளது. வாளைப்போலப் பிளப்பது என்பது அதன் பொருள்.

பொய் + மை = பொய்ம்மை:—குறிலணைந்த யகர மெய்யோடு மை என்னும் உருபு புணரும்போது அம் மெல்லினமெய் மிகுந்தது(7—453)

என்னும்விள் ளாதயர்ந் திருக்கு மேமுறுந்
தன்னையு மறக்குமெய்த் தரும நன்றெனப்
புன்னகை கோட்டுமெய் புழுங்கும் வெய்துயிர்த்
தன்னமுன் னுரைத்தவை யனைத்து மெண்ணுமால்

(உரை). என்னும் - என்று சொல்லிக்கொள்வான். விள்ளாது - ஒன்றும் பேசாது, அயர்ந்து இருக்கும் - சோர்ந்திருப்பான். ஏம் உறும் - வருத்தப்படுவான். தன்னையும் மறக்கும்-தன்னுடைய நினைவையேமறந்துவிடுவான். மெய்த்தருமம் நன்று என - 'என்னுடைய வாய்மை விரதத்தால் விளைந்த இவ் விபரிதம் வெகு நன்று, வெகுநன்று' என்று,புன்னகைகோட்டும்-புன்சிரிப்புக்கொள்வான். மெய்புழுங்கும் - உடல்வெதும்புவான். வெய்துயிர்த்து-பெருமூச்சுவிட்டு, அன்னம் முன் உரைத்தவை அனைத்தும் - தமயந்தியின் அழகு பெருமை காதல் முதலியவைகளைப்பற்றி முன் அன்னம் உரைத்துள்ள சொற்களை யெல்லாம், எண்ணும்-நினைத்துக்கொள்வான். (ஆல் - அசை).

குறிப்பு:—என்னும், இருக்கும், மறக்கும், முதலியவை, என்பான்,மறப்பான், என்ற பொருளுடைய ஆண்பாற்படர்க்கை வினைமுற்றுக்கள். செய்யும் என்னும்இந்தவாய்பாட்டு வினைமுற்று, வழக்கத்தில், குதிரை ஓடும், புலிபாயும், என ஒன்றன்பாற் படர்க்கையிலே பயிலப்பெறுகின்றதாயினும்,இராமன்சிரிக்கும் சீதை இயம்பும், கிளி பேசும், பறவைகள் பறக்கும், எனப் பலர்பால்தவிர மற்ற நான்குபால் படர்க்கையிலும் வரலாம். நாம் வரும்,நீகொடுக்கும்,புலவர்கள் பாடும் எனத் தன்மையிலும் முன்னிலையிலும் பலர்பால் படர்க்கையிலும் இவ் வாய்பாட்டு வினைமுற்று வாரது (5-386).

இலக்கணம்.

சிற்சில சிறப்பு விதிகளைத் தவிர மற்றபடி பொதுவாக, வருமொழிமெய்யோடுபுணர்கின்றஉயிரீற்றிற்கு ஒத்து நடப்பதால் யகர ரகர மெய்யீறுகளை முதலில்

நாம் எடுத்துக்கொண்டோம். இனி மகரமெய்யீற்றை எடுத்துக்கொள்ளலாம். மகர மெய்யீற்றுச் சொற்கள் வருமொழிமுதல் உயிரோடு புணர்வதற்குரியவிதிகள் நினைவில் இருந்தால் அது வருமொழிமுதல் மெய்யோடு புணர்கின்ற விதிகளைக் கற்பது எளியதாகும்.

C. மகரமெய்யீறு

I மகரமெய்யீறு + மெல்லின மெய்ம்முதல்.

மெல்லினமெய்களில் மொழிக்குமுதலில் வரக்கூடியன, ஞகர நகர மகரங்கள். ஙகரம் அங்ஙனம் இங்ஙனம், எங்ஙனம், எனச் சுட்டு எழுத்துடனும் வினவெழுத்துடனும் மாத்திரமே சேர்ந்துவரும்.

(1) நிலைமொழியி னிறுதியில் மகரமெய்நிற்க வருமொழிமுதலில் ஞகர நகர மகரங்களாகிய மெல்லின மெய்கள்வருமாயின் எல்லாத்தொடர்களிலும் நிலைமொழியிறுதியில் நின்ற அம் மகரமெய் கெட்டுவிடும்.

பறக்கும் + ஞிமிறு = பறக்கு ஞிமிறு— பெயரெச்சத்தொடர்.

புலியும் + ஞமலியும் = புலியுஞமலியும்— இடைச்சொற்றொடர்.

தாளம் + நகை = தாளநகை — உவமத்தொகை.

மாடம் + நிடதம் = மாடநிடதம்—இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை.

மனம் + நெகிழ்ந்தது = மனநெகிழ்ந்தது— எழுவாய்த் தொடர்.

பூகம் + மடல் = பூகமடல்—ஆரும்வேற்றுமைத்தொகை.

பதுமம் + முகம் = பதுமமுகம்-உவமத்தொகை.

மருதம் + நிலம் = மருதநிலம்—பண்புத்தொகை.

குளம் + நோக்கினன் = குளநோக்கினன்— இரண்டாம்வேற்றுமைத் தொகை.

(2) நிலைமொழி நும் தம் எம் நம் என்னும் இந் நான்குசொற்களி லொன்று யிருக்குமாயின்,வருமொழிமுதலில் மகரம் வரினும் அந் நிலைமொழியீற்றுமகர மெய் கெடாது—

நும் + மாலை = நும்மாலை. எம் + முகம் = எம்முகம்

தம் + மானம் = தம்மானம். நம் + மனம் = நம்மனம்

(3) எம் நம் தம் நும், என்னும் இந்நான்கு சொற்களுக்குப்பின் வருமொழிமுதலில் ஞகர நகரங்கள் வருமாயின் நிலைமொழியீற்று மகரமெய்யும் அந்த ஞகர நகர மெய்களாகத் திரியும்.

எம் + நலம் = எந்நலம். நம் + நேயம்—நந்நேயம்.

தம் + நிலம் = தந்நிலம் நும் + நகை—நுந்நகை.

எம் + ஞாண் = எஞ்ஞாண். நம் + ஞாலம்--நஞ்ஞாலம்

தம் + ஞேயம் = தஞ்ஞேயம். நும் + ஞமலி—நுஞ்ஞமலி.

இரவொன்றிற் பல பிழைகள்

[Oliver Goldsmith's—"She Stoops to Conquer"]

அங்கம் 5. களம் 3.

[492-வது பக்கத் தொடர்ச்சி]

இடம்:—ஹார்ட்காஸலின் மனையில் ஓர் அறை.

[ஸர் சார்லஸ்ஸும் காதெரினும் வருகின்றனர்.]

ஸர் சார்லஸ்:—என்ன இடுக்கண்ணில் அகப்பட்டிருக்கிறேன் நான்! நீ சொல்வதே உண்மையாஞல் என் மகன் குற்றவாளியாகிருன். அவன் சொல்வது உண்மையாஞல், எல்லாரிலும் யாரை நான் மருமகளாகக் கொள்ளவிரும்பினேனே அவளை இழந்தவனுவேன்.

காதெரின்:—என்னிடம் நீங்கள் வைக்கின்ற இந் நன்மதிப்பிற்கு மிக்க வந்தனம்; அதற்கு நான் தகுதியுள்ளவள் என்பதையும் காட்ட விரும்புகிறேன். ஆகையால் நான்சொன்னபடி அக்கதவிற்குப்பின் சற்று ஒளிந்திருப்பீர்களாயின், அவர் தமதுகாதலைத் தாமே வாய்விட்டு விளம்பக் கேட்பீர். இதோ வருகிருர்.

ஸர் சார்லஸ்:—நான் சென்று உன் தந்தையுடன் மறைந்து நிற்கின்றேன்.

[ஸர் சார்லஸ் போகிருர்]

மார்லோ வருகிருன்.

மார்லோ:—புறப்படுவதற்கு நான் ஆயத்தமாயிருப்பினும், உன்பால் விடைகொள்ள மீண்டும் வந்திருக்கின்றேன். இந்தப் பிரிவில் இத்தனை வருத்தம் இருக்குமென்று நான் இந்நிமிடம்வரையில் எதிர்பார்க்கவுமில்லை.

காதெரின்:— விலக்கக்கூடிய வகை உங்கள் கையிலேயிருக்க, பின்,தாங்கள் படுவதாகக் கூறுகின்ற இவ் வருத்தம் அதிகமும்பெரியதாக இருக்கஇயலாதென்றெண்ணுகிறேன். ஒருகால் இன்னும் இரண்டொரு நாட்கள் இங்குத் தங்கியிருப்பீர்களாஞல், நீங்கள் இப்பொழுது யாரை விட்டுச்செல்ல மனம் பொருது வருந்துகின்றீர்களோ அவள் நீங்கள் நினைத்தவளவு மதிப்பிற் குரியவளல்லள் என்பது தெரியவரும். அதஞல் சஞ்சலமில்லாமற் பிரியலாம்.

மார்லோ:—(ஒரு புறமாய்) நிமிடத்திற்கு நிமிடம் இந்தப்பெண் என் மதிப்பில் உயர்கின்ருளே! (அவளைப் பார்த்து) இல்லை அம்மா, நான் இன்னுந் தயங்கலாகாது. இன்னமும்அலைத்தால் எப்படித் தாங்கும் என் இதயம். எனது பெருமை என்னுடைய ஆர்வத்திற்கு அடங்கத் தலைப்படுகின்றது. குலத்திலும் செல்வத்திலும் நம்மிருவர்க்குமிடையுள ஏற்றந்தாழ்வும், ஒரு தந்தையின்கோபமும், என் இணையானவர் தம்அவமதிப்பும், தம் அதிகாரத்தை இழக்கின்றன. வருந்தி மனந்துணிந்து இப்பொழுதே உன்னைவிட்டுப் பிரியேனுகில், பிறகு என்னையே நான் அடியுடன் இழந்துவிட்டவனுவேன்.

காதெரின்:—ஆயின், ஐயா, போய்விடுங்கள். இனி நீங்கள் தங்கும்படி தூண்டுவதற்கு நானே ஒன்றுஞ் செய்யமாட்டேன். நீங்கள் எந்தக் குடும்பத்தில் பெண்கொள்ள வந்தீரோ, அக்குடும்பத்திற்கு என்குடும்பம் யாதுங் குறைந்ததில்லை; கல்வியிலும் நான் ஒக்கின்றேன். ஆயினும் செல்வமும் செல்வாக்கும் இல்லாமல் இவைகளால் என்ன பயன்? என்னை ஏதோ சிறிது மதித்துப் பாராட்டினீர்களே, அதனோடு நான் திருப்தியடைந்து இருந்துவிட வேண்டியவள்தான்; என்னை நீங்கள் கொண்டாடியது அத்தனையும் பரிகசமே; ஏனெனில்,உங்கள் நோக்கமெல்லாம் பணத்தின் மேலே அழுந்தியிருக்கின்றதென்பது தெரிகின்றது.

[ஹார்ட்காஸலும் ஸர் சார்லஸ்ஸும் பின்புறம் வந்து ஒளிந்துகொள்கின்றனர்]

ஸர் சார்லஸ்:—இங்கு இங்கு, [illegible] பின்வந்து மறைந்துகொள்.

ST
m211,N22KN
N34·7·32
199182

ஹார்ட்:—ஆம், ஆம், அரவம் செய்யாதே. என் காதெரின் அவனைஎப்படிக் கலக்கங்காணப்போகிருள், பார்.

மார்லோ:—தெய்வ சாக்ஷியாக, செல்வந்தை நான் சிந்திப்பது சிறிதினுஞ்சிறிதே. முதலில் என்கண்ணைக் கவர்ந்தது உன் அழகு; அதனைக்கண்டும் ஆர்வம்கொள்ளாமல் யாரால் இருக்க இயலும்? அன்றியும், உன்னேடு உரையாடும் ஒவ்வொரு நிமிடமும் உன் புதுப்புது வனப்பிற்கு நான் கொள்ளைபோகின்றேன். முன்னே உன் நாட்டுப்புறப் பேதைமை என்று நான் கருதியது, இப்பொழுது தேர்ந்து முதிர்ந்த இயற்கைநயமாகத் தோன்றுகின்றது. முன்னே உன் அடக்கமற்ற துணிவாகக் காணப்பட்டது, இப்பொழுது மாசிலா மனத்தின் தைரியமாகவும் நெஞ்சறிந்த கற்பென்றுந் தெரிகின்றது.

ஸர் சார்லஸ்:—என்ன என்ன! இப்படியா இவன் செய்தி! ஆச்சரியத்தை அடக்க முடியவில்லையே!

ஹார்ட்:—இப்படியே யிருக்குமென்று நான்தான் சொன்னேனே—கப்சிப்!

மார்லோ:—நல்லது, தங்கிவிடுவதென்றே நிச்சயம் செய்துவிட்டேன். என் தந்தை நல்ல அறிவாளியாகையால், உன்னைப் பார்ப்பாராயின் தம் சம்மதத்தை மறுப்பாரோ என்று சங்கைகொள்ள இடமில்லை.

காதெரின்:—ஐயா, அதுகூடாது. நான் உங்களை நிறுத்தமாட்டேன், நிறுத்த இஷ்டமுமில்லை. பிறகு எள்ளளவேனும் மனத்தின் தாபத்திற்கு இடமிருக்கிற ஒரு சம்பந்தத்திற்கு நான் உடன்படுவேன் என்றெண்ணுகின்றீர்களா? ஏதோ இப்பொழுது நீங்கள் கொள்கின்ற இச்சபலத்தை எனக்கு இலாபமாக்கிக்கொண்டு பிறகு உங்கள்மனத்திற்குத் தீராத கலக்கத்தைச் சுமத்துவேன் என்று எண்ணுகின்றீர்களா? உங்களிலிருந்து குறைத்து நான் பெற்ற இன்பத்தை உவப்பேனென்று எண்ணுகின்றீர்களா?

மார்லோ:—நன்மைஎன்றுஇருப்பதெல்லாம் நான் சொல்வதற்குச் சாக்ஷி—நீ எனக்குத் தரக்கூடியஇன்பமல்லாமல் என்னுடையது எனத்தக்க இன்பம்நான் வேறொன்று மறியேன். உன்னுடைய தகுதியைநான் முன்னரே உணர்ந்துகொள்ளாமற் போனேனே என்பதற்குஅன்றி யான் வேறெதற்கும் மனம் கலங்கவும் மாட்டேன், உன்னுடைய இஷ்டத்திற்கு விரோதமாகவுங்கூட நான் நின்றுவிடவே நிச்சயம் செய்துவிட்டேன். என்னைக் கைவிதிர்த்து நீ அகன்றுலும் நானே, பண்டைய என் கருத்தற்ற நடத்தைக்கெல்லாம் பரிகாரமாக, உன்னை ஆராதித்துக்கொண்டிருப்பேன்.

காதெரின்:—வேண்டா வையா, இவ்வகை வார்த்தைகளை விட்டுவிடுங்கள். நம் உறவு பராமுகமாய் ஆரம்பித்தது போலவே முடிந்தும் விடட்டும். நானும் இரண்டொரு மணிநேரம் கருத்தற்று நடந்திருக்கலாம். ஆயினும், பணத்தில் ஆசை வைத்தவள்போல் நானும், அழகில் வைத்த ஆசையால் அசடாக முடிந்தவர்போல் நீங்களும் தோன்றுகின்ற இந்தச் சம்பந்தத்திற்கு நான் மனப்பூர்வமாய் உடன்படுவேனென மதிக்கின்றீர்களா? தன் உயர்வையே நினைத்து நினைத்து உறுதிகொண்டிருக்கிற ஒரு காதலர், தாம்வேண்டினுல் எவள்தான் மறுப்பாள் என்ற நிச்சயத்துடன் வந்து எதிர்நின்று வியந்துபேசும் இவ்வார்த்தைகளை விழுங்கிநான் மோசம்போவேனென்று எண்ணுகின்றீரோ!

மார்லோ:—(அவள் காலில் விழுந்து) இதுவுமா உறுதிபோல் தோன்றுகின்றது? இதுவுமா நிச்சயம் போல் தோன்றுகின்றது? இதுவும் நிச்சயம்போல் தோன்றுகின்றதா உனக்கு? உன்னுடைய பெருமையைக் காட்டுகின்ற ஒவ்வொரு நிமிடமும் என் அயர்வையும் கலக்கத்தையுமே அதிகமாக்குகின்றது. இப்படியே இனி எந்நாளும் நான் உன்காலின்கீழ் கிடக்கும்படி நீ அருளவேண்டும்.

ஸர் சார்லஸ்:—இனி என்னல் பொறுக்க முடியவில்லையே! அடே, மைந்தா மைந்தா, எப்படி யெல்லாம் என்னை வஞ்சித்தாயடா! இதுவா உன் அலக்ஷியும்! இதுவா உன் சுவையற்ற சம்பாஷணை!

ஹார்ட்:—உன் உணர்ச்சியற்ற வெறுப்பு! ஒப்புக்கு நீ அவளோடு உரையாடியது! என்ன சொல்லப்போகின்றுயிப்பொழுது?

மார்லோ:—என்ன விந்தை இது! இதற்கெல்லாம் ஏதோ பொருள்!

ஹார்ட்:—'உன் இஷ்டப்படி நீ சொல்வதைச் சொல்லலாம், சொன்னதைப் பிறகு மாற்றலாம்' என்பதுதான் பொருள்; எங்களுக்குச் சொல்ல ஒரு கதை வைத்திருக்கின்றுய்; மற்று, என்மகளுக்குச்சொல்ல வேறொரு கதை வைத்திருக்கின்றுய்!

மார்லோ:—மகளா! இந்தப் பெண் உங்கள் மகளா!

ஹார்ட்:—ஆம், ஐயா, என் ஒரே மகள். என் காதெரின்! வேறு இவள் யார் மகளாக இருக்கவேண்டுமென்கின்றுய் நீ?

மார்லோ:—ஓஹோ ஹொ! அடதெய்வமே!

காதெரின்:—ஆம் ஐயா! ஒன்றரைக்கண் பார்வையோடு ஒரு கொம்பு இங்குத் திரியக்கண்டீரே, அதுவேதான் நான். சாந்தமும் அடக்கமும் சிந்தனையும் நிறைந்தவரென்று உங்களை நீர் பேசிக்கொண்டதும் என்னிடத்தில்தான்; தைரியமும் துணிவும் நிறைந்து மாதர்களிடையே 'கிலுகிலுப்பை' என்று உவகையுடன் அழைக்கப்படுபவரென்று பேசிக்கொண்டதும் என்னிடத்தில்தான். ஹ, ஹ, ஹா!

மார்லோ:—ஐயோ, முட்டிக்கொள்ளட்டுமா! இதை நான்பொறுப்பதெப்படி; சாவினுங்கொடியதாயிற்றே இந்த அவமானம்!

காதெரின்:—உங்களை இனி நாங்கள் எந்தவேடத்தில் அழைப்பதற்கு உத்தரவு செய்கின்றீர்? தரையிலிருந்து பார்வையை வாங்காமல், மெல்லிய குரலில் தயங்கித்தயங்கிப்பேசி வெளிவேடத்தைவெறுக்கின்றவொரு பெரிய மனிதராகவா, அல்லது, பெண்கள் கூட்டத்தில் புகுந்து இரைந்து திரிகின்ற ஓர் உல்லாச மனிதராகவா? ஹ, ஹ, ஹா!

மார்லோ:—ஐயோ! என் கிலுகிலுப்பைத் தலையில் இப்பொழுது ஒரு இடிவிழாதா! உங்கள் ஒருவர் முகத்திலும் இனி விழிக்காமல், இதோபோகின்றேன் நான்.

ஹார்ட்:—என்தோளில் தொங்கும் கைகளின்மேல் ஆணை, உன்னைப் போகவிடேன். இத்தனையும் பெரிய பிழையால் நேர்ந்ததென்பது தெரிகின்றது. அத்தனையும் எனக்குச் சந்தோஷமே. ஐயா, நீ அடியெடுத்து அசையப்படாது. இவள் உன்னை மன்னிப்பாளென்பது அறிவேன். அவரை மன்னிக்கமாட்டாயோ நீ, காதெரின்? நாங்கள் அனைவரும் உன்னை மன்னித்துவிட்டோம். மனத்தைத் திடஞ் செய்துகொள்ளப்பா.

[மார்லோவும் காதெரினும் பேசிக்கொண்டு
ஒருபுறம் போகின்றனர்.]

இரவீந்திரநாதர் கட்டுரைகள்

தபோவனம்

[439-வது பக்கத் தொடர்ச்சி]

ஆம்! அதர்மமாகிய பாவத்தைப் புறங்கண்டு வெற்றிகொள்ளவல்லவொரு வீரபுத்திரனை எவ்வண்ணம் பெற்றெடுக்கலாம் என்னுமக் கேள்வியையே இவ்வுலகம் அன்றுதொட்டு இன்றளவும் கேட்டுவருகின்றது. மனிதரில் ஒவ்வொருவரும் தம் வாழ்நாள்முழுவதுமிக்கேள்வியைக் கேட்கின்றனர். அன்றியும், இந்தக் கேள்வியானது பற்பல மனித சாதிகளினிடையே பற்பல புதியபுதிய உருவமெடுத்துத் தோன்றுகின்றது.

காளிதாஸன் காலத்தினும் யாதினும் முக்கியமாக ஒருகேள்வி தோன்றியெழுந்தது. அந்தக்கேள்வியும் அதன் விடையும் யாதென்பது இந்தக்கவியின் காவியங்களைப் படித்துப்பார்க்குங்கால் தெளிவாகப் புலப்படும். புராதன பாரதநாட்டின் முறைப்படி, அடக்கமுடனும் ஆரவாரமின்றியும் தம் வாழ்நாட்களைக் கம்பீரமாக யாதும் வருந்தாமல் இனிமை வாய்ந்த எளிமையுடன் நடத்திவந்த வாழ்க்கையானது காளிதாஸன் காலத்தில் அழிவடையத்தலைப்பட்டது. மன்னவர் தமது அரசதர்மத்தை மறந்து சிற்றின்ப அனுபவங்களில் மூழ்கியிருந்தனர். மறுபுறம், மீண்டும்மீண்டும் வித்தியர் மண்டிவந்து செய்த அக்கிரமக் கேடுகளுக்கு இப்பாரதநாடோ ஆளாயிற்று. அக்காலத்தில் நடைபெற்ற மானுடவாழ்க்கையை நாம் கவனித்துப் பார்ப்போமாயின், காவியம் சங்கீதம் சிற்பம் அனைய கலைகள் பாரதநாட்டின் நாகரிகத்தில் மேன்மையான நிலை பெற்றிருந்ததென்பதைக் காணலாம். ஆயினும், இதனினும் சற்று ஊன்றி நோக்கினுல் இதனுள் ஒரு இரகசியம்புலப்படும். அது என்னவெனின், காவியம் சங்கீதம் சிற்பம் அனைய இக்கலைகள் தம்முள்தங்கிய அத் தத்துவத்தினுல் பிறந்து சிறப்புடன் பொலிந்து ஜனங்களின் புனித வாழ்க்கையில் கமழ்வது போக, காளிதாஸனது காலத்தில் இக்கலைகள், ஜனங்களின் சிற்றின்ப வாழ்க்கைக்கு உபகரணங்களாகவே கைக்கொண்டு பாராட்டப்பெற்றன. இவை சிற்றின்பங்களின் உபகரணங்களாக நேர்ந்த இராகத்தின் தொனி காளிதாஸன் எழுதிய காவியங்களினுள் கேட்கவில்லை என்று இயம்பஇயலாது. தன் காவியங்களின் உயிர்நிலையாகிய விடயங்களுக்குப் புறம்பான அனுபவங்களைப்பற்றிப் பேசும்போது அவனுடைய காவியங்களிலிந்தத் தொனியைக் கேட்கின்றேம். இவ்வண்ணம், தன்னுடையகாலத்துடன் அந்தக்கவிக்கு இருக்கின்ற ஒற்றுமை புலப்படுகின்றது.

ஆயினும், இந்தச் சிற்றின்ப மாளிகையாகிய பொற்கூட்டினது அந்தப்புரத்தின் நடுவிடத்தே உட்கார்ந்துகொண்டு, நம் காளிதாஸனது கவிதாதேவதையானது வைராக்கியம்நிறைந்துள்ள தன்மனத்தினுல் எதனைத்தான் ஆழ்ந்து தியானம் செய்துகொண்டிருந்ததோ! இச்சிற்றின்ப அனுபவங்களின்மீது உண்மையில் அக்கவிவரன் இதயமோ ஒருபோதுஞ் சென்றதில்லை. நவரத்தினமயமாகிய அந்த விசித்திரச் சிறைச்சாலையிலிருந்து விடுதலை அடைவதைக் குறித்தே அவன் சிந்தித்துக்கொண்டிருந்தான். இந்தச் சிந்தனையின் பயனுக, உள்ளத்திற்குஏற்ற அமைதியுடன் புறத்திற்குரிய அல்லல்களும், சாதித்துக் கைகூடியவைகளோடுஇனிஒன்றைச் சாதிக்கவேண்டுமென்கிற அவாவுடைய மனேபாவனையும் முரண்பட்டு ஓயாப்போர் புரிந்துநிற்பதை இப் புலவர்பெருமானது காவியங்களில் காணலாம். தவயுகத்தின்ஆட்சி அக்காலத்தில் இந்தப் பாரதநாட்டைவிட்டு நெடுந்தூரம் அகன்றுபோய்விட்டாலும், அதன்நினைவினது அருமைமாத்திரம் காளிதாஸனது கருத்தைவிட்டு நீங்கிவிடவில்லை. ஆதலின், தவத்தின் ஆட்சி விட்டுச்சென்ற இடத்தில் இப்பொழுதுவீற்றிருக்கின்ற இன்பானுவ உருவமாகிய செல்வத்தின் சிம்மாதனத்திற்கு அருகிலே இக் காளிதாஸமகாகவி அமர்ந்திருந்தாலும், கண்கடந்து நெடுந்தூரம் நீங்கிவிட்ட அந்தத் தூய்மைமிக்க காலத்தையே இவன் மிகுந்த வேதனையுடன் தன் பார்வையைச் செலுத்திக் காட்சிகொள்வான்ஆயினன். கழிந்தவொரு நிலையை அருமையுடன் கருதிய வண்ணமே, வந்திருக்கின்றவொரு நிலையோடு இணங்காமாட்டாத இப்போராட்டம் நிகழ்கின்றநீர்மை காளிதாஸனது காவியங்களில் தெளிவாகக் காணப்படுகின்றது. இந்தப்போராட்டம் இருந்ததென்பதை உணர்ந்துகொள்ளும்படி செய்வதோடு, அதுநீங்கி, அமைதிஅடைகின்ற இடத்தையும் நாம் அறியும்படி புரிவதால் காளிதாஸனுடைய மேன்மை பின்னும்பலபடி. சிறக்கலாகின்றது. இவ்வமைதியின் தன்மையை நமக்கிவன் "குமார ஸம்பவத்தில்" விளக்கி யிருக்கின்றுன். உண்மையான வீரமுடைய ஒருவன் எந்நிலையிலிருப்பினும், எவ்வளவு அதர்மங்களுக்கு இடையேயிருந்தும், விடுதலை யடையவல்லவனே என்னும் தத்துவம் அந்தநூலில் காணக்கிடக்கின்றது. இதனேடு நிற்காமல், அவ்வீரம் எப்பொழுது உற்பத்தியாகும் என்பதையும் அக்காவியத்தினிலிருந்து அறியலாம். செல்வவாழ்க்கையி னிடையே உள்ளத்தில் துறவுபூண்டு ஊடாடும் நிலையும், உலகத்திலிருந்துவிலகிய தவத்தினிடையிலும் அன்புஅகலா மனநிலையும்இணங்கி ஒன்றுசேரும்போது அத்தகைய வீரம் பிறக்கின்றதென்பது குமாரஸம்பவத்தினின்று நன்கு தெரிகின்றது.

ஆகவே, தியாகமும் போகமும் சமமாக ஏற்பட்டு இணங்கினுல்பூரணசக்திஉண்டாகின்றது. பரமசிவன் சமாதிநிலையில் மௌனம்பூண்டிருந்தபோது சுவர்க்கலோகம் சகாயமில்லாததாயிற்று. அன்றியும், சக்தியானவள் தனதுதந்தையின் செல்வம்நிறைந்த மாளிகையின் வைபவங்களுக்கிடையே அடைபட்டிருந்தாள். அந்தப்பொழுது அசுரர்களினுடைய உபத்திரவம் அதிகமாயிற்று. ஏதேனும் ஓர் மனேவிகாரம் தலையெடுக்குமானுல் தியாகத்திற்கும் போகத்திற்குமிடையே இருந்தசமநிலைகெட்டுவிடுகின்றது. நான்நான் என்னும் அகங்கார நினைவையும் அது கொள்ளும் ஆசையின் பாவனையையும் முழுமையினின்றுவேறுபடுத்தி நாம்

தனியாகவைத்து விவகரிப்போமாயின், அம்முழுமையையும்நஷ்டப்படுத்தி,பாகத்தையு மளவுகடந்துபெரியதாகக் காட்டவே பிரயாசைப்பட்டவர்களாவோம். இப்படிச்செய்வதனால் அமங்களம் உண்டாகின்றது. இப்படி முழுமைக்கு விரோதமாகத் துரோகஞ்செய்வதும், பாகத்தின்மீது பொய்யான பற்றுவைப்பதும் இவை இரண்டுமே பாவமெனப்படும்.

இதனாற்றான் துறவு எக்காலும்அவசியமாகின்றது. துறவென்பது ஒருவன் தன்னை வறிதாக்கிக்கொள்வதன்று; பூரணமாக்கிக் கொள்வதே துறவாம். துறவாவது முழுமையை அடையும்பொருட்டுப் பாகத்தை விட்டுவிடுதலும் நித்தியத்தையடையும்பொருட்டு அற்பசுகங்களைக் கைவிடுதலும்,அன்பினை அடையும்பொருட்டுஅகங்காரத்தைஒழித்துவிடுதலும்,ஆனந்தத்தை அடையும்பொருட்டுச்சிறுசவுகரியங்களைத்தேடாமல் விடுதலும், இவைகளே துறவின் இலக்ஷண மாகும். ஆதலாற்றான், "தக்தேன புஞ்சிதம்"—துறவின் மூலமாகவே வாழ்க்கையை அனுபவி, பொய்ம்மையின் மூலமாக அனுபவிக்கஇயலாது— என்று உபநிடதம் கூறும்.

காலம்

[494-வது பக்கத் தொடர்ச்சி]

பருவம்.

பருவமாவது மாதம்இரண்டுசேர்ந்ததொரு காலப் பகுதியாகும். இதனைப் பெரும்பொழுதென்று பழந் தமிழ்மக்கள் வழங்கினார்க ளென்றும், அப்பெரும் பொழுதானது ஒருயாண்டின் ஆறிலொருபகுதியாகு மென்றும் முன்ன ருணர்ந்திருக்கின்றோம். இப்பாகுபாடும் ஓர்யாண்டில் நிகழும் பல்வகைஇய வியற்கைத் தோற்றத்தின் வேறுபாடுகளையும் அறுவகைப்படுத்தி அவற்றைக் கார்முதலியனவாய பெயர்களுங்குறித்து வழங்கியதாலெழுந்ததாகும். இக் கார்முதலியபெயர்களு மந்தந்தக் காலத்தினியல்பைத் தெரிவிப்பனவேயாகும். இப்பெற்றியனவாய பாகுபாடும் குறியீடுமே வடமொழியிலுங் காணப்பெறுகின்றன. ஐரோப்பியர்கள்மட்டும் நான்கே பவருவமென்னப் பகுத்திருக்கின்றனர். அந்நாட்டி னியற்கை அத்தகையதே போலும்.

நமதுநாட்டுப் பெருமக்களோ பண்டைக்காலத்துப் பருவங்குறித்தே பெரும்பொழுதைப் பெரும்பாலும் வழங்கிவந்தனர் என்றும், மிகத் தொன்மைத்தாய தொல்காப்பியமும் மற்றைய அகப்பொரு ளிலக்கணங்களும் அவ்வகப்பொருள் தழுவிய விலக்கியங்களும் பெரும்பொழுதைக் குறிக்கவேண்டு மிடமெல்லாங் கார் முதலிய பருவப்பெயர்களாலேயே குறிக்கின்றன என்றும் முன்னரே தெரிந்தோம். சித்திரை முதலிய மாதப்பெயராற் காலத்தைக் குறிப்பிடுவதும் சிறுபான்மை உண்டு.

> "நலமிகு கார்த்திகை நாட்டவ ரிட்ட
> தலைநாள் விளக்கிற் றகையுடைய வாகிப்
> புலமெலாம் பூத்தன தோன்றி......"
>
> (கார்நாற்பது 20.)
>
> "தவத்தைந் நீராடுதல்" (பரிபாடல் 11—91)
>
> "பாரி பரம்பிற் பனிச்சுனைத் தெண்ணீர்
> தைஇத் திங்கட் டண்ணிய தரினும்
> வெய்ய வுவர்க்கு மென்றனிர்" (குறுந்தொகை 196)

என்று இவ்வகையே வருவன மிகச் சிறுவரவினவே என்பதும் ஆங்கே உணர்ந்தோம். சித்திரை விசாகம் முதலியன ரிக்வேதத்தில் நட்சத்திரமேகுறிக்கின்றன. சைத்திரம் வைசாகம் முதலிய சொற்களே அங்குக் காணக்கிடைப்பனவல்ல. பருவப்பெயர்களாகிய வஸந்தம்முதலியனகொண்டே காலங்குறிப்பிடப்படுகின்றது. அம் முதன்மறையும் இவ்வகையிற் பழந்தமிழர்களோடு சிறியதோ ரொற்றுமையும் பெற்றிருக்கின்றது. காலஞ் செல்லச்செல்ல மாதவழக்கு, பிற்காலத்துத் தமிழ்நூல்களின்கண் பெருவழக்கினதாகின்றது. யஜுர் வேதத்திலிருந்து இவ்வியல்பு மிகுந்து காண்பதும் நோக்கத்தக்கதாகும். இவையனைத்துஞ் சிறிது சிறிதாகமாதவழக்குவளர்ந்து பருவப்பாகுபாட்டைப் பெரும்பாலும் மறைத்துவிட்ட தென்பதைத் தெளிவாக்கும்.

கம்பராமாயணம்

கிஷ்கிந்தாகாண்டம்—7. வாலிவதைப் படலம்

[489-வது பக்கத் தொடர்ச்சி]

வேற்றுமை யறியாக் கூற்றமு முளதோ.

இத்திறத்தில் இராமனிங்குத் தன் தம்பியைச் சொல்லால் தொலைக்கப்புகுந்து தானே தோல்வியை வருந்தியழைத்துக்கொள்ளும்அமயம்,அவன்வில்லிற்கோர் இலக்காகவந்துள்ளவாலிதன்தம்பியைநெருங்க இருவரும் மூரித் திசையானைக ளிரண்டென முட்டினார். இவ்வாறு, மலையோடு மலை நெருங்கினாற்போன்றவர்களும், வலிமைமிக வாய்ந்த ஆண்சிங்கங்கள்இரண்டு எதிர்த்ததைப்போன்றவர்களும்ஆகி நெடுநேரம் ஒருவர்கைக்கு ஒருவர் எட்டாமல் வலசாரி இடசாரி திரிந்தனர். அப்பொழுது இந்தநிலவுலகமானது குயவன் வனைகின்ற சக்கரம்போற் சுழன்றது.கிரகங்கள் இரண்டு நெருங்கினதைஒத்த அவ்வாலிசுக்கிரீவர்கள் கோபாவேசங்கொண்டு தோளோடுதோள் உராய்தலினாலும் காலோடுகால் தேய்த்தலினாலும் உண்டாகிய நெருப்புப் பிழம்புகள் மின்னல்வீசுவபோல் பரந்த வானத்தில் விரைந்து செல்லும்—

> தந்தோள் வலிமிக் கவர்தம் மொருதாய் வயிற்றின்
> வந்தோர் மடமங் கைபொருட்டு மலைக்க லுற்றார்
> சிந்தோ டரியொண் கட்டிலோத்தமை காதல் செற்ற
> சுந்தோபசுந்தப்பெயர்த்தொல்லையினோருமொத்தார்

[தம் தோள்வலியில் மிக்கவர்களும், ஒருதாய் வயிற்றிற் பிறந்தவர்களும், ஒரு இளமை பொருந்திய பெண்ணின் பொருட்டுப் போர்செய்யப் புகுந்தவர்களுமாகிய அவ் வாலி சுக்கிரீவர்கள், சிதறிப் பரந்த வரிகளுடைய பிரகாசமான கண்களையுடைய திலோத்தமையினிடத்திலே கொண்ட ஆசையினால் பகைத்துப் போர்செய்த சுந்தன் உபசுந்தன் என்னும் பேருடைய பழைய அசுரர்களையும் ஒத்தார்]

சுந்தோபசுந்தர்செய்த போரிற்போல இவ் வாலிசுக்கிரீவர் செய்கின்ற போரிடையேயும் ஒரு மடமங்கை இருக்கின்றாளானாலும் அங்குப்போன்று இங்குஇம் மடமங்கையின்பொருட்டே முனைந்து நிகழ்த்தப்பெறும் போரன்றிது. மற்றுச் சுந்தோபசுந்தரைப்போல் இங்கிவ்விருசகோதரர்களும் ஒருங்குமடியவில்லையாதலின் இவ்வுவமையும் பெரும்பான்மை ஏகதேசமே. அன்றியும், வாலியோடு சுக்கிரீவன் ஒத்த வலியினன் அல்லன் என்பது அச்சுக்கிரீவனே உள்பட அனைவரும் அறிந்ததும் ஒன்று. இராமபாணம்வாராதிருந்தவரையில் இத்தம்பி பட்டபாட்டை அவனது ஒவ்வொரு உறுப்பும் கூவி அலறும். ஆயினும், சிறிது காலம்வரையில், ஒத்த வலியினர் உழைத்துச்செய்யும் இணைப்போரென்னவே கம்பர்,வால்மீகிமுனிவரைப் பின்பற்றி, இதனை நிகழ்த்திவைக்கின்றார்—

> கடலொன்றினொடொன்றுமலைக்கவுங்காவன்மேருத்
> திடலொன்றினொடொன்றமர்செய்யவுஞ்சீற்றமென்ப
> துடல்கொண்டிரண்டாகியுடற்றவுங்கண்டிலாதே
> மிடலிங்கவர்வெந்தொழிற்கொப்புரைவேறுகாணேம்

[கடல்கள் ஒன்றோடொன்று போர்செய்யவும், உலகத்தைக்காக்கும் மேருமலையின் சிகரங்கள்ஒன்றோடொன்று போர்செய்யவும் கோபம் என்பதே இரண்டாகிய உடல் கொண்டு போர்செய்யவும் பார்த்திருக்காத யாம்,வலிமையுடைய இவ்வாலியும்சுக்கிரீவனும் செய்யும் கொடியபோருக்கு வேறு உபமானம்கூற வகையறியாமல் இருக்கின்றோம்]

என்பர். எந்தப்போரிலும் இப்படியே முதலில் இருவரும் ஒத்தவர்போற் றோன்றுவ தியல்பு. பில்லியர்ட்ஸ் (billiards) முதலிய ஆட்டங்களிலும் ஓட்டம் முதலிய பந்தயங்களிலும் இதனைக் காணலாம். சிறிதுநேரம்பொறுத்தே வலியவன் விஞ்சுவது தவறுமற்றெரியத் தலைப்படும். இதற்கிடையில்,

> ஊகங் களினா யகர்வெங்க ணுமிழுந்த தீயான்
> மேகங் களெரிந் தனவெற்புமெ ரிந்த திக்கி
> னாகங் கணடுங் கினநானில முங்கு லைந்த
> மாகங்களைநண்ணியவிண்ணவர்போய்மறைந்தார்.

[குரங்குகளுக்குத் தலைவர்களான அவ்வாலிசுக்கிரீவர்களினுடைய கொடியகண்கள் சொரிந்த தீயினால் மேகங்கள் எரிந்தன, மலைகளும்எரிந்தன. திக்குயானைகள் நடுங்கின. நால்வகைப்பட்ட நிலங்களும்நிலையழிந்தன. ஆகாயத்தை அடைந்த தேவர்கள் ஓடி ஒளித்தார்கள்]

இன்னவர் வானத்தின்மேலிருக்கின்றாரோ, பெரிய மலைகளின்சிகரங்களின்மேல்இருக்கின்றாரோ,உலகத்தினப்பாலுள்ள திசைகளின் கடையெல்லை வீதியில் இருக்கின்றனரோ, அல்லது உலகங்களில் உள்ள எல்லோர் கண்களிலுந்தான் இருக்கின்றாரோ என்னவே யாவரும் வேறுவேறுநோக்கி வியக்கும்படி, புண்மீது இரத்தம்சிதறக் கடிப்பவரும் அடிப்பவரும் ஆயினர். இவர் குத்துகின்ற ஓசையானது கற்பாந்த காலத்தில் எழுகின்ற மேகங்களின் பேரிடிமுழக்கத்தை ஒத்து ஒலித்தது.

> உரத்தி னன்மடுத் துந்துவர் பாதமிட் டுதைப்பர்
> கரத்தி னல்விசைத் தெற்றுவர் கடிப்பர்நின் றிடிப்பார்
> மரத்தி னலடித் துரப்புவர் பொருப்பினம் வாங்கிச்
> சிரத்தின்மேலெறிந்துறுக்குவர்தெழிப்பர்தீவிழிப்பர்

[ஒருவரையொருவர் மார்பினால்மோதித்தள்ளுவார்,கால்களை எடுத்து உதைப்பார், கைகளால் வேகமுடன்தாக்குவார்,நேர்நின்று இடித்துக்கொள்வார், மரங்களைக்கொண்டடித்து அதட்டுவார், மலைகளைப் பறித்துத் தலைமேல்வீசி அச்சமுறுத்துவார்,ஆரவாரஞ்செய்வார், தீஎழ விழிப்பார்.]

> வெருவிச்சாய்ந்தனர்விண்ணவர்வேறென்னைவிளம்ப
> லொருவர்க்காண்டமரொருவருந்தோற்றிலருடன்று
> செருவிற் றுத்தலிற் செங்கனல் வெண்மயிர் செல்ல
> முரிபுற் கானிடை யெரிபரந் தனவென முனைவார்.

[அப்படிநிகழ்ந்தபோரில், ஒருவருக்குஒருவர் தோற்காதவராய் உக்கிரமாய்ப்போர்செய்து அப்போரைத் தாம்வீரமுடன் அனுபவித்தபடியால், உலர்ந்த புற்கள் நிறைந்த காட்டில் நெருப்புப்பரவியதுபோல, வெண்ணிறமானதங்களுடையஉடம்புமயிர்களிலிருந்து சிவந்தநெருப்புஎழஅவ்விருவரும் போர்செய்யலானார். அதனைக்கண்டு தேவர்பயந்து விழுந்தனர் என்றால் வேறென்ன சொல்வது]

இதுகாறும் இவ்வண்ணம் சமப்போர் நிகழ்ந்தது. இனி, வாலியின் ஆற்றல் தலையெடுக்கின்றது.

> அன்ன தன்மைய ராற்றலி னமர்புரி பொழுதின்
> வன்னெ டுந்தடந் திரள்புயத் தடுதிறல் வாலி
> சொன்னதம்பியைத்தும்பியையரிதொலைத்தென்னக்
> கொன்ன கங்களிற் கரங்களிற் குலைந்துக மலைந்தான்.

[அத்தகையவர் ஆற்றலோடு போர்புரியும்போது, வலிய நீண்ட பெரிய திரண்டதோள்களையும் பகையையழிக்கும் வலிமையும் உடைய வாலியானவன், அந்தத் தம்பியை,யானையைச் சிங்கம் அழிப்பதுபோல, கொல்கின்ற நகங்களாலும் கைகளாலும், நிலைகுலைந்து உதிரும்படி போர்செய்தான்.]

அப்புறம்என்ன! இராமன் இருந்ததிசையை ஏங்கி யேங்கி நோக்கினான் சுக்கிரீவன். இராமபாணம் புறப்படவில்லை. பிறகு வான்மீகமுனிவரே கூறட்டும்:—

"சுக்கிரீவன் வாலிக்குத்தோற்று இராமரைக் காணமல் ருசியமூகபர்வதத்தை நோக்கி ஓடலாயினன். அடிபட்டுக் களைத்துத் தேகம் முழுவதும் இரத்தந் தோய்ந்து ஓடிப் போகும் சுக்கிரீவனை வாலி துரத்திக்கொண்டு சென்று அவன் மதங்கவனத்தில் புகுந்ததைக் கண்டு தனக்கு நேர்ந்த சாபத்தின் பயத்தால் அங்குச்செல்லமாட்டாதவனாகி, "இன்று நீ தப்பினாய்"என்றுசொல்லித் திரும்பிவிட்டான். அப்போதுஇராகவன்லக்ஷ்மணரோடும் சுக்கிரீவன் இருந்த காட்டிற்குச் சென்றார். அவரைக்கண்டு சுக்கிரீவன் வெட்கமடைந்துபூமியைக்குனிந்துபார்த்துக்கொண்டுபரிதாபமாக "இராகவ, வாலியைச் சண்டைக் கழையென்று என்னை ஏவி உம்முடைய பராக்கிரமத்தையும் எனக்குக் காட்டி, என்னைச் சத்துருவினால் அடியுண்ணப்பண்ணிச் செய்யாத காரியம் செய்தீர். 'நான் வாலியைக் கொல்லமாட்டேன்' என்று நீர் அப்பொழுதே சொல்லியிருந்தால் நான் அங்கே போயிருக்கமாட்டேனே" என்றான். இவ்வாறு சுக்கிரீவன் வெகு பரிதாபமாய்ச் சொன்னபொழுது, அவ்வார்த்தைகளைக்கேட்டுஇராமர் மறுமொழிகூறலுற்றார்:—"ஐய, சுக்கிரீவ, யாது காரணத்தால் நான் பாணந் தொடுக்கவில்லையென்பதைச் சொல்கிறேன்கேளும். ஆபரணதிகளாலும், உருவத்தினாலும் நடையுடைகளாலும் நீங்கள் இருவரும் ஒருவரை யொருவர் ஒத்திருக்கின்றீர், குரலாலும் சொல்லாலும் தோற்றத்தாலும் பராக்கிரமத்தாலும் உங்களுக்குள் ஒருவகையான பேதமும் என்னால் காணமுடியவில்லை. வானரோத்தம, உங்களுடைய உருவத்தின் ஒற்றுமை

யினால் மயங்கினேனாகையினால் சத்துருவைக் கொல்லுகின்ற மகாவேகமுள்ள என்னுடைய பாணத்தை நான் எவவில்லை. நீர்எல்லாவற்றாலும் வாலியையொத்திருந்தமையால் எங்கேஎனதுபாணமானது உம்மேற் பாய்ந்துவிடுகிறதோ என்றுபயந்தேன். என்னுடையசெயலா லுமக்கேதேனும் அபாயம்நேரிட்டுவிடுமானால் பின்எனது அறிவின்மையும் பிள்ளைத்தன்மையும் உலகெங்கும்பரவிவிடுமன்றோ? தஞ்சமடைந்தோரைக்கொல்லுவதானது மகாபாதகம். நானும் லக்ஷ்மணனும் சீதையும் உம்முடைய சொல்லின்கீழ் உள்ளோம். இந்தக்காட்டில் நீரன்றோஎங்களுக்குப்புகலிடம். ஆகையால் நீர் போய் மறுபடியும் யுத்தம் செய்யும். பயப்படவேண்டாம்.இக்கணமே வாலி எனதுபாணம் பாய்ந்து பூமியில்விழுந்து உருளுவதைப்பாரும். நீங்கள் இருவரும் போர்புரியும்போது உம்மைநான் அறிந்துகொள்ளும்படி நீர் உம்முடையஉடலில் ஓர் அடையாளம் தரித்துக்கொள்ளும். லக்ஷ்மணா, நீ இந்த நாகபுஷ்பக் கொடியைப் பிடுங்கி மகாத்துமாவாகியசுக்கிரீவனுடைய கழுத்தில்போடு"என்றார். உடனே இலக்ஷ்மணர் அப்படியே செய்ய, கொடியை அணிந்த சுக்கிரீவன்......வாலியுடன் மறுபோர்செய்யப் புறப்பட்டுப் போயினான்."

* * *

சுக்கிரீவன் இராமனை இரந்து ஏசியதும், இராமன், தன்தம்பியோடும் சீதையோடும் மீண்டும் சுக்கிரீவனைத் தஞ்சம் புகுவதும் தவிர்த்து, ஏனையவற்றை ஏற்றுக் கொண்ட கம்பர்,

மலைந்த போதினைந் திரவிசே யையன்மாட் டணுகி
உலைந்த சிந்தையோ டிணங்கினன் வணங்கிட வுள்ளங்
குலைந்தி டேலுமை வேற்றுமை தெரிந்திலங் கொடிப்பூ
மிலைந்து செல்கென விடுத்தன னெதிர்த் தனன்மீட்டும்

[அவ்வாறு வாலிபோர்செய்தபோது, சூரியகுமாரனான சுக்கிரீவன் தளர்ந்து, இராமனிடம்வந்து, வருந்தியமனத்துடனே வாட்டமடைந்தவனாய்வணங்க, இராமன்அவனை நோக்கி, 'மனம்குலையாதே, உங்கள் இருவருக்கும் வேற்றுமை அறியாமற்போனோம், இனிநீ,கொடிப்பூ மாலையைச் சூடிச்செல்' என அனுப்ப, சுக்கிரீவன் அவ்வாறே மீட்டும் சென்று வாலியை எதிர்த்தான்.]

என்று கூறுகின்றார். வான்மீகத்திற்போலவே இங்கு இவ்விராமன் இலக்குவனைக்கொண்டு சுக்கிரீவனுக்கு அந்தக் கொடிப்பூமாலையைச் சூட்டுவிக்காததன் காரணம் வெளிப்படை. வெறுப்புடன் மருண்டுள்ள தன் தம்பியின் முகத்தை எதிர்நோக்கி இதனையும் சொல்லிப்பிழைத்திருப்பானாயின் இராகவன் ஒரு வீரனே. வானரவீரர் இருவருள்ளும் வேற்றுமை தெரியாமையால், வாக்களித்தபடி அம்பினை எய்யாமல் தான் தாழ்த்தான் என்று இராமன் சொல்கின்ற காரணத்தைப் பொய்யென்றுகொள்ள ஒருவருந்துணியார். உலகமே துன்பப்பெருஞ் சிறையென்றும், மெய்ம்மையுற்றார் சிலரே யென்றும் சில தத்துவப்பொய்கள், தான் நடிக்கும் நாடகத்தின் கொடுமையால் ஒருகால் சொன்னானேனும்இவ்விராமன் என்ன அயிர்ப்பதினின்று, வர்த்தமானப் பொய்களுஞ்சொல்லவல்லவன் எனமதித்து, சுக்கிரீவனுக்குரைத்த இதுவும்அவ்வினத்தைச் சேர்ந்ததே என்று எண்ணிவிடல் தயரதன்புதல்வன்திறத்தில் முறைமையன்று. மற்று, வாலிசுக்கிரீவர்களைப் பித்தாய விலங்கென்று பேசியது இவன் நெஞ்சறிந்தோ அறியாமலோ, என்று வினவவேண்டா—அவ்விடயம் வேறு. "அற்றார்நவை யென்றலுக்கு ஆருநர் ஆர்கொல்" என்று இவ்விராகவன் வகுத்த அவ்விதியைக்கொண்டு இப்பொழுது இவனையே அளக்கப் புகுந்தால் ஆபத்தாய் முடியும். இத்தனையும் ஆய்ந்து இராமனது வாய்மையிற்றானே உறுதிகொண்டாலும், வேற்றுமைவிளங்காத அவ்வொருகாரணத்தாற்றானே வாலியை இலக்குவைத்துத் தன் கை வில்லை இவன் இதுவரை வளைத்திலன் என்னுமோர் ஐயம்இன்னும் ஒரு புறத்தில் உறுத்தி நிற்கின்றதெனின், இலக்குவன் அப்பொழுது இராமனுக்கருகிருந்தமையே அவ்வையத்திற்கு ஒருவாறு ஆதாரம் அளித்தல் வேண்டும். இத்தம்பியின் கண்முன் தன்வில் கோணாமலே சுக்கிரீவன் ஒருகால் வென்றுற்றானாகாதோ வென்றெதிர் பார்த்திருந்தானோ! அவனெதிரிற் கரவுடைய வாளி தொடுக்க இவன் கைகள் மறுத்தவோ! மற்று, வாலிக்கோர் கூற்றுவனாய் வந்துநின்றபின் வேற்றுமை தெரிந்ததில்லை என்பது என்! வான்மீகத்திலாவது, வாலிசுக்கிரீவர்கள் போர்செய்த இடத்திற்கும் இராமன் இருந்த இடத்திற்கும் இடையே பலகாவதம் கிடந்ததுபோல் தோன்றுகின்றது. கம்பரது நூலில் அந்த இடையூறுமில்லை. இலக்குவனுக்கெதிர் இன்னதோர் விற்பழி பூண அவன்மனம் நாணினமையால், தோள்களும் மறுத்தனபோலும். கொடிப்பூச் சூடிச்சென்ற சுக்கிரீவன் மறுபோர்புரிந்தபோதும் இராகவன் இனிச் சுக்கிரீவன் உயிர்தப்பான் என்ற நிலை எய்தும் வரையில் வாலியை எய்தானல்லன். அப்பொழுது இறுதியாக வொருவாளியை, நாணொடுதோளிறுத்துத் துரந்தான், என்று கம்பர் கூறுகின்ற வாசகம், நமது ஐயத்தையே வலிவு செய்கின்றது.

சூளாமணி

[238-வது பக்கத்தொடர்ச்சி]

குமாரகாலச் சருக்கம்.

மிகாபதிசசிஎன்ற இவ்வரசியருடைய திருவயிற்றிலே, இருவர் பிள்ளைகள் பிறக்கின்றார். முன்பிறப்பில் கடவுளர் உலகத்தை ஓர் ஊழிக்காலம்வரை யாண்டு, பின் இவ்வுலகில்இவ்வரசியரின் திருவயிற்றறையே அக்கடவுளுலகினும் சிறந்தது என நச்சிப் போந்து தங்களுடைய பழைய பொலிவும் வீறும் தோன்றும்படி தோன்றுகின்றனர். ஒரே காலத்தே இவ்விருவரும் தோன்றியதோற்றத்தின் பொலிவு எங்ஙனமிருந்தது? உலகை வளைந்துகிடக்கும் பெரிய நீர் நிறைந்த அலைகடலிலே செம்மாந்து நின்று மேலும்மேலும் வளர்வதே போன்று தோன்றும் வலம்புரி ஒன்று அதோ விளங்குகிறது. அதனைச்சுற்றி, அக்கடலின் உயர்ந்து ஓங்கி வளர்கின்ற நீரோ, கருமைநிறத் தொளியோடும் ஒளிர்கின்றது. ஒன்றிற்கொன்று அழகு தந்து ஒன்றினொன்றால் ஒளிரும்இவையிரண்டும் ஒருங்கேஉடனியைந்து தோன்றினாற்போன்றே, வெண்மைநிறத் திருமேனியும் கருமைநிறத் திருமேனியும் கொண்டு விளங்கு மிவ்விருவரும் பண்டைக் கடவுட்டன்மையோடு தோன்றுகின்றனர்.

அனைவர்க்கும் ஆகத்தக்கவெனும் நற்குணங்களால் பெண்களிலே சிறந்தவளும் பெண்மைத்தன்மையே

நிலவுந் தகுதியுடையாளுமாய்ச் சிறப்புற்றுவிளங்குவவாள் பெருங்கோப் பெண்டாம் மிகாபதி. காதலென்னும் இன்பப் போர்க்களத்திலே தனது மணாளனோடு பேரமர்புரிந்து அக்களத்தைத் தனதேயாகக்கொண்டு வெற்றிபெறுவன, அன்னவளுடைய ஒப்புயர்வற்ற கண்களாம். அக்கண்கள், தம்மையும் மறந்து நிற்கும் மகிழ்ச்சி மேன்மேலும் வளரவளரும் உவகையானது எல்லைகடந்து கடலெனப் பொங்க அதிலே மூழ்கிநிற்கின்றன இதுபோது. தனது அருமைக் கணவனை நேரிற்கண்டு இன்பவுலகில் பொருதுநின்ற கண்கள், அக்கணவனை, தான் பெற்ற குழவியின் திருமுகத்திலும் கண்ணொளியிலும் வாய்நெளிவிலும் இன்குரலிலும் கண்டுகளித்துமுனைப்பு அடங்கிப் பேரின்பநிலை பெறுகின்றன. இதுவரையுந் திங்களை வானத்தே எழக்கண்டாள், மிகாபதி; அதனொளி நிலவுகிலும் பரவக்கண்டனள் இதுபோதோ. கூவென்றலறிவீழ்ந்து தன்மடிமீதமர்ந்ததும் குளிர்ந்துநோக்கி மகிழும்குழவியைஎதிர்ப்பட்டுக் குழவி எனக் கண்டாள் இல்லை; குளிர்ந்த நிலவினைப் பொழிகின்ற வெண்ணிலாவின் சுடர்ப்பிழம்பு ஒன்றே காண்கின்றாள். அஃதோ வானிடையன்றிமண்ணிடைத்தோன்றி, உலகனைத்தும் தண்ணிலாப்பொழிந்து விளங்கி வானகத்திலும் புகழ்பரப்பி நிலவு வீசி வீறெய்துகின்றது. பழைய புகழுடம்போடும் கடவுட்டன்மையோடும் தோன்றிய அந்தக்குழவி அவள்கண்ணிற்கு அவ்வாறு பின்னே வரப்போகும் அத்தகைய புகழொளியோடும்விளங்குகின்றது. இன்னவாறு பிறரினும் சிறந்து வெற்றிப்புகழ் கொண்டமைக்கு ஏற்ப விஜயன் என்னும் பேரும் பெறுகிறது. வெளுத்த நம்பியாம் மூத்த நம்பியின் பிறப்பு ஈது.

இளங்கோப் பெண்டாம் சசியம்மையோ, அழகே கடவுட்டன்மை பெற்று விளங்குவதுபோலும் சிறப்புடையவள். "என்றுநான் என்றன் இளங்குழவியைக் காண்பேன்" என நாள் எண்ணிக்கொண்டிருந்த அம்மையாருக்கு முந்நூறு நாள்களும் நிரம்பியதும் நல்லதோர் நாளிலே, மிகுபுகழ்பெற்ற தனித்தலைமைத்தன்மையே மிக விரும்பி மேற்கொண்டு எவற்றினும் மிக்கதாய் ஒளிரும் நீலச் சுடர்ப்பிழம்பு வடிவமாகத் தோன்றுகின்றான். அவள் மகிழ்ந்ததைச் சொல்லவேண்டுமோ? நீரொடு வளைபோன்றார் தோன்றலும், நீரினில் கூத்தாடி ஒளிபெறும் வளைகள்நிரைநிரையாகத்தாமே களித்துப் பொங்கி விம்மியபோன்று, அரசிளங்குழவிகளின் பிறப்பைக் கேட்டுத் தம்மைமறந்து ஊதுவார் வாயிலே ஒலித்து நிற்கின்றன. இக் களிக்கூத்து இவ்வுலகில் மட்டுமோ! மேலுலகில் வாழும் இமையவர்களும், அரிதினும்அரிய கடவுண்மாமழை பொழிகின்றார்கள்.

எங்கெங்கு நோக்கினும் தெளிவெனுமொன்றேகூத்தாடுகிறது. மக்களிடை கலக்கமும் இல்லை, வான்மீன்களின் மயக்கமும் இல்லை; முகில்களின் குழப்பமும் இல்லை. நீரும் நிலனும் காற்றும் கனலும் தெளிந்து விளங்குகின்றன. உள்நாட்டிலோ வெளிநாட்டிலோ போர்முழக்க மில்லை. சிறையாளர் விடுதலைபெறுகின்றனர். இயற்கையே ஒரு வடிவுகொண்டு அமைதிபெற்றதுபோலத் திகழ்கின்றது. எங்கும் மேலோரின் உள்ளம்போலத் தெளிவே விளங்குகின்றது.தெளிவிலன்றோ இன்பம் விளைவது. இமையோரது பொன்னகரத்திலும், இன்பம் இசையாக இயைந்துவெளிப்பட்டுப் பெரியதோர் திருவிழா வடிவுகொண்டு விளங்குகிறது. இவ்வுலகினியைபு இருந்தபடி அது; அவ்வுலகியைபு இருந்தபடிஇது. தோலாமொழித்தேவர் தெளிவென்றார் ஒன்றை; இசையென்றார் மற்றையதை. இவ்வுலகிலே மிக மிகக் கொடியதாய் மக்களை வருத்திப் பிறர்கடை கொண்டுசென்று கையேற்கவைத்து மேன்மேலும் முறுகிவளர்ந் தெரியும் வறுமைத்தீயும் ஆசைத்தீயும்,வேண்டியவேண்டியாங்கீகின்றஇத் திருநாளில், இன்ப அன்பு மாரியாம் வள்ளன்மையினாலே அவிந்தொழிகின்றன. அவாவற்ற நிலையன்றோ தெளிவுநிலையாவது. அவ்வமைதி மனத்திலும் வாயிலும் உடலிலுமுயிரிலும் ஒருங்கே இயைந்து இசையாக இன்பக்கூத்தாடுமானால் வாடி வதக்கும் தீவினை பசையே யற்றுத் தீய்ந்து காய்ந்து இன்பச்சுழற்காற்றில் பறந்தேயன்றோ போய்விடுகின்றது.

இவர்க்கெனவே செய்தமைத்ததுபோல இவர்களுடன்பொருத்தமுறுதலால்மாட்சிமைப்பட்டதிருநகரத்திலே நாளொருமேனியும் பொழுதொருவண்ணமுமாகப் பற்பல துறையிலும் தலைசிறந்து வளர்ந்து வந்து இம்மக்கள் காளைகளாக விளங்குகின்றார்கள். மையணிந்து நீண்ட தம் கண்களால் மக்களின் மனத்தே மயக்கத்தை யூட்டிக் குழம்பச்செய்யும் பெண்கள் பிறரைக் கலக்கும் நிலையொழியத் தாமே இவ்விளங்காளைகளைக்கண்டு கலங்கிநிற்க, அவ்வாறு பண்பட்ட மனத்தே, வலிய கணையாலும் கவர்தற்கரிய மனத்தையும் கவரும் சிறப்புப்பெற்றாலும், மிகமெல்லியவையாயுலவுகின்ற காமனார் கணைகளாம் காதற் பூக்கள் இதுபோது அரும்புவிடத் தொடங்குகின்றன.

அப்பெண்களுக்குத் தோன்றிய காட்சி இவையேயாம். பெரியநம்பியின் திருமேனியின் பொலிவானது அவர்களுடைய மனத்தைக் கவர்கின்றது. கண்டோரால் விரும்பப்படும் தன்மை நோக்கமுடைய திருமேனி, வலம்புரி போன்று விளங்கும் திருமேனி, திருமணங் கமழும் திருமேனி; இஃது அவர் கண்ட திருமேனி. கண்களைக் காண்கின்றார்கள், தம் கையிற் பிடித்த செந்தாமரையைக் காண்கின்றார்கள்; செந்தாமரையின் உள்ளிடத்தே மிகமெல்லியவாய்ச் சிறுகச் சிவந்து தண்ணெனப் பொலியும்அல்லியையும்வென்றன இக்கண்கள் என உணர்ந்து, தம் கையிற் பிடித்த தாமரையை நோக்க விரும்பாது அவன் கண்களிலேயே பதிந்துவிடுகின்றார்கள். அவனுடைய தலைக்குஞ்சி கண்டதும் இதற்கிவன் எவ்வாறு புகையூட்டுவான் எனஎண்ணமிட்டு ஏங்கிக் காண்கிறார்கள். "புகையும் உள்நுழையுமேல் மயங்கித்திகைத்துப் போக்குவாயறியாது உள்ளே சிக்கி நிற்குமன்றோ; இருள் என்பதொன்றே பூங்கொத்துப்போலத் திரண்டதுபோலும்,அத்திரட்சியே இக்குஞ்சி" என்கின்றனர். காதைக் கண்டு அங்குஆடுகின்ற குழையோடுதம்மனம் ஊசலாடாநிற்கின்றனர். பொலிவுபொருந்திய பொன்னாலாகிய அக்குழைகளிரண்டும் அவன் அசையுந்தோறும் புரண்டு ஒளிரும்காதுகளில்தம்மனத்தைப் புரளவிடுகின்றனர்.

அவனணிந்த தலைமாலையைக்கண்டுமிகப்பொறாமைகொண்டு, "அக்கண்ணி வாடுதலேஇல்லையன்றோ,அவனொடுகூடினார்வாடுவதேது." எனமனமங்குகின்றனர். தாம் தழுவவிரும்பும்மார்பு தம்எண்ணத்தைப்போல் அளவின்றிமலர்ந்து தோன்றக்கண்டு "அங்குநாம் துயிலேமோ" என மால்கொள்கின்றனர். தம்மை யணைக்க

விரும்புங்கைமிகப்பெரிதாய்முழந்தாள்வரைநீண்டுநிற்கக்கண்டு அக்கைபால்நம்மை அணையானோ இவ்வரசப்பேரடையாளம் உடையான் என இவர் எண்ணுதலும், அவ் வன்பென்னும்ஒளியால் அவன் பொலிவுபெற்றுச் சுடரொளியாய் விளங்கக் காண்கின்றனர். சுடரொளிவழியே மேல்நோக்கித் தாம் மிக விரும்பத் திரண்டு விளங்குகின்ற தோள்கள் கொடுமுடியோடு உயர்ந்த குன்றேபோலத் தோன்றக்கண்டு அவற்றிற்கவாவி நிற்கின்றனர். இதற்குள் அவன் நடந்து அப்புறத்தே செல்லுதலின், அவன் நடையழகிலும் ஈடுபட்டு,என்ன பீடுடைய நடை எனப் புகழ்கின்றனர். இத்தகைய அழகியான் பெரிய நம்பி.

இங்கு மேலே கூறிய மூத்த நம்பிக்குச் சிறியனான இளைய நம்பியோ, வேறு படித்தாய் விளங்குகின்றான். வலம்புரியோ என்றும் ஒரு படித்தாகும். இவன் நிறமோ பூவைப்பூ நிறம். ஆனால் பூவைப்பூ இடையில் வாடி மாறுபடும். இவனுடைய வடிவோ புத்தம் புதியதாய்த் தண்ணென்று குளிர்ந்து மெல்லியதாய் விளங்கும் காயாம்பூவின் கருஞ்சுடரொளியே போல்கின்றது.அவன் வடிவுக்கோர் ஒப்புமை நாடுகின்ற பெண்கள் இமைக்கிமை காயாம்பூ வாடுவதுகண்டு இமைதோறும்போய்ப் புதுப்பூக்கள் பறித்துவருகின்றனர். தூய்மையோடு விரிந்ததோர் கடவுட்டாமரையையும் காணவேண்டாவென அப்புறத்தே வீசி எறியும்படி செய்யும் அத்தகைய அழகிய கண்ணழகன், கடவுட்டாமரை கண்டாரும் கருத்தழிந்து காதல்கொள்ளும் கண்ணழகன், தீயெனப் பூத்து மலர்ந்த ஆம்பற் பூவினும் மிகச் சிவந்த வாயழகன்; ஆம்பல் நாடிய பெண்கள் இவன் வாயழகினை நாடிநிற்கின்றனர். பெருமையோடு விரிந்தமார்பிலே திருமறு அழகாகப் பொலிய விளங்குகின்றவன். மார்பழகுக்கு ஓர் இயற்கையணி புனைந்தாற்போலு மதுகண்டு மருளாதார் யார்.

அவனுடையகையிலோ,பேரரசர்க்கடையாளமாம் செங்கயற்கோடும் வலம்புரிக்கோடும், திகிரிக்கோடும், விளங்கக்கண்டு மனமகிழ்கின்றனர். அவன் நடந்து செல்கின்றான். தண்டாமரையினும் பொலிவுபெற்ற அவனுடையதிருஅடிகளின்சுவட்டிலே அம்மீனு மவ்வலம்புரியும் அத் திகிரியும் காண்கின்றனர். அவனுடைய எதிர்காலப்பெருமையிலே யீடுபட்டுத் தம்மை மறந்து அவன் நடந்துசெல்வதைக்காண்கின்றார்கள். அரசனில்லாவூரிலே, அரசனைத்தேடிவர விட்ட இளநல்யானை,அரசணையிலேற அருமகனொருவனைத் தன் எருத்தத்தின்மீது பொலியக்கொண்டு மண்ணுமங்கலச் சிறப்பொடு வருவதுபோலக் கனாக்காண்கின்றார். அத்தகையஎல்லோராலும் கடவுட்டன்மையோடு உயிரினும் மிக விரும்பி எதிர்பார்க்கப்படும் அரசயானையின்செருக்கிய நடையையே அவ்விளைய நம்பியின் நடைக்கு ஒப்புக் காண்கின்றனர்.

இவ்வாறு இவர்களிருவரும் இளமை யடைந்தபொழுது இதுகாறும் உறங்கிக்கிடந்த உலகம், திருவெனும் பயிரை எங்கும் விளைத்து மகிழ்ச்சிபொங்கக் கண்மலர்ந்து பொலிவுபெறுகின்றது. இவர்களாலே செல்வம் எங்கும் தழைத்தோங்க எங்கும் இன்பம் கூத்தாடுகின்றது. "நல்ல நகர்" எனப் பலரும் கொண்டாடப் பலவகைச் செல்வமும் நிறைந்த நல்ல நகரம் மதில் சூழ இருந்தும், இவ்விருவருக்கு அரியதொன்றும் அன்றாதலின், இவர்களைக் கண்டு மனம் புழுங்கும் பகைஞர்க்குக்கூட அச்செல்வங்கள் இப்போது மிக மிகப் புல்லியனவாகத் தோன்றுகின்றன. வரிகள் அமைந்த வளையல்களை யணிந்துள்ள தோளாலழகிய பெண்களது மனத்திலே இவரைக்கண்டதால் எழுந்தகாமநோய் எரியானது இவர்களை வளைந்துகொண்டு நெருக்கி உட்சென்று பரவுவதுபோல வருத்தத்தொடங்குகிறது.

கர்ணன் மாண்பு

'வள்ளன்மைக்கோர் உறைவிடமாயும், நன்றி மறவாமைக்கோர் நாயகமாயும், வீரத்தின் சேமமும்' என்றெல்லாம் கன்னனைப் பற்றிப் பலரும் பலவாறு புகழ்ந்து எழுதுவது வழக்கம். சிலரால் கர்ணனே பாரத கதாநாயகனாகவும் கருதப்படுகின்றான். யாவரினும் மேம்பட்ட விற்றிறல் உடைமையானும், நாயகியரை உடைமையானும், அருச்சுனனையே சிலர் பாரதத்திற்குக் கதாநாயகனாகக் கொள்வர். அதற் கெதிரிடையாகப் பல அரிய குணங்கள் வாய்ந்த கன்னனையே சிலர் கதாநாயகனாகவும் ஏற்றிச் சொல்வது இயல்பே. இது இவ்வாறாக, ஆசிரியர் வில்லிபுத்தூரரோ தாம் கண்ணனையே கதாநாயகனாகக் கொண்டதாகப் பாயிரம் எழுதிப் போந்தனர். யார் உண்மையில் கதாநாயகர் என்பதை முடிவுசெய்துகாட்டுவதற்கு நான் இங்குத்தலைப்பட்டிருக்கவில்லை.இங்கு நான் எடுத்துக்கொண்ட விஷயம் கர்ணன்பண்பு, புகழ்ச்சிக்கு மாத்திரந்தான்உரியதோ என்பதை ஆராய்வதேயாகும். அதற்கு வில்லிபாரதத்தைத் துணையாக் கொள்வோம்.

கர்ணனிடத்தில் வெகுவாக விளங்கி நின்றது அவனது க்ஷத்திரிய மனவலியே என்பர். அதற்கு உதாரணமாக அவன் பரசுராமரிடம் நூல் கற்றபோது நடந்ததைக் கூறுவர். இன்னும் உதாரணங்கள் பெருக்கலாம். இவனது பிடிவாதமாகப் போர்செய்யும் திறன், நிறைமீட்சிச் சருக்கத்தில் அருச்சுனனிடம் மும்முறையும் தோற்றும் மனந்தளராமல் பின்னும் அவனுடன்போர்செய்யத்தொடங்கியதினின்றும்விளங்கும். அஃதன்றியும் பதினான்காம்போரில் கன்னன் வீமனால் பலதரம் அடியுண்டானேனும் போர்க்களத்தைவிட்டு ஓடாததே இவன் பிடிவாதத்திற்கு ஏற்ற சான்றாகும். மற்று மிவன் போராற்ற முடியாவிடினும் மூர்ச்சிக்குமளவும் போர்செய்வதல்லது, துரோணன் முதலியோரைப்போல் தோற்றுப் புறங்காட்டுவதில்லை என்பதை நாம் கருதவேண்டும்.

கன்னனது க்ஷத்திரிய மனவலி இத் தன்மைத்தேனும் பாரதத்தில் இவன் யாவரினும் சிறந்த வீரனென்பது எளிதில் ஏற்கப்படுவதன்று. இவன் தெய்வ பலத்தில் சிறந்தவனே. கவசகுண்டலங்களும் அசுவசேனன் என்னும் பாந்தட் பகழியும் உடையவனே. இவைகளை இவன் வீட்டும்போது இவனுக்கு அருச்சுனனும் நிகர் இல்லையென்பது இவர்களுடைய கடைநாட்போரில் வெளிப்படை. ஆயினும் இமையோர்கள் வரங்களினால் எய்திய வாளிகளினால் இயற்றப்படாத போரில் கர்ணன் கிரீடிக்கு இளைத்தவனே என்பது இவர்களது மற்றைநாட்போரில் நன்கு வெளிப்படும்.

பதினான்காம் போரில் வீமனிடமும் தோல்வியுறுவதாலும், 'வாயுமகனைவெல்லுதல் அரிது' என்று சல்லியன்கூறியதாலும் இவன் வீமனுக்கும்இளைத்தவனோ என்னும் ஐயம் நிகழ்கிறது.

மேலும் கர்ணன் பாரதத்தில் கொடுமையிழைத்த 'தீய மன்னர்களில் ஒருவன்' என்பதை மறுக்க வியல்வதில்லை.சூதுபோர்ச்சருக்கத்தில் இராசசூபத்தினின்றும் திரும்பிவந்த துரியோதனன் கொலுவீற்றிருந்தபோதுஅங்குத்,"தருன்மாமதலைபெற்ற மேதகுவேள்விச் செல்வம் வேந்தரில் யாவர் பெற்றார்."என்றுகூறி இராசராசனது கொடிய எண்ணத்தைச் சபையோர்க்கு முதலில் அறிமுகப்படுத்தியவன் இவனே. இது நல்லோர்கள் எனக் கருதப்படுகின்ற துரோண தாமவிதுரவீடுமர்முதலினோர்செய்யாதசெயலாகும்.மற்று, பாஞ்சாலியைச் சபையில்இழுத்தபோதுஅதற்குடன்படாதவிகருணனைக்கண்டித்து "இருக்கின்றதரணிபரினின்னறிவால் உயர்ந்தனையோ" என்றிவனே யிகழ்ந்தான். மேலும் தருமன் தன்னை வைத்தாடித் தோற்றபின் தன் மனையாளைச் சூதாடித் தோற்கமுடியாதென்றுரைத்த பாஞ்சாலிக்கு மறுமொழி யுரைக்குமாற்றால், "எங்கும் இல்லெனப்பட்டது இல்லாளன்றோ" என்று யுக்திவாதம் நிகழ்த்திக் குற்றத்தைப் பெருக்குகின்றான். இதனால், கன்னன் தீயவன் என்பதில் ஐயமென்னை. ஆயினும், அரசனுக்கு அவன் மனஆற்றின்படியே நடந்து மதிகூற வேண்டுமென்பது கர்ணனது கொள்கையா யிருக்கலாமெனின், அக்கொள்கை தவறுடைத்தென்றும், அரசனுக்குக் 'கசக்கும்' நன்மதி கூறுதலே அமைச்சர் கடனாதலாலும், வீடுமர் முதலியோர் அப்பொல்லாங்கில் ஈடுபடாததாலும், கன்னனைத் தீமையிழைத்தவர் கோட்டியிலேயே சேர்க்கக்கூடும். வீண் விளம்புவானேன்? பாஞ்சாலி தன்சுயம்வரத்தில் 'சூதன் மகனுக்கு மாலை யிடேன்" என்று கூறிய வாய்மையன்றோ, கன்னன் பொல்லாங்குக்குக் காரணம் ?

மற்றும் வேறொரு செயலினைக் கருதுவோம். நச்சுப்பொய்கைச்சருக்கத்தில் துரியோதனனது கொடிய நினைவினை முனிவனுக்கு அறிவித்தவன் இக்கன்னனே. அச்சொல்லைப்புகலச் சகுனியும் கூசினானென வறிகின்றோம்.இத்தகையை ஓர் பாதக உரையை அறிவித்தவனை நாம் கண்டிக்கலா மல்லவா? ஆயினும் அரசன் கருத்ததுவாகில், அதைக் கூறுவது கடமையாதலின் கூசாது கூறியது அவனது க்ஷத்திரிய மனவலிமையேயாகும்என்று நாம்கூறக்கூடும். கண்ணன் இவனைநோக்கி, "வண்மையினு மிதயத் திண்மையி னுயர் நின்னையு மன்பொடு தினகரன் நல்கினனே" என்று இவனது இதயத்திண்மை கூறுகின்றார். ஆனால் இத்திண்மை, போரிலும் தான்நின்ற சில கொள்கைகளிலுமே யன்றிப்பிரிதுகாணவில்லை. மற்றைப்படி இவன் மனம் இளகியதே. அதனால்தான் இவனது வள்ளன்மை-வண்மை- பாரதம்முற்றும் சிறப்புற்றோங்குகின்றது. "வண்மையாளர் தம் ஆருயிர் மாற்றலர் கேட்பினும் மறுக்கிலார்." என்னும் புகழ்ச்சிக்கு உரியவன் இவனே. அதிலும், இவன் மனவலி யுடையோனேனும் சொல்லாற்றான். பதினான்காம் போரில் சுயோதனன் கன்னனைப் பார்த்து "இந்திரன் வேலால் கடோற்கசனை வீட்டுக"எனக் கன்னன் தான் அவ்வேலினால் பார்த்தனையே கொல்ல எண்ணியிருந்ததைக் குறித்தான். உடனே இராசராசன் ஆற்றாது சில சொல்ல, அச்சொல் பொறாமல் கன்னன் கடோற்கசன்மீது அவ்வேலைத்துரந்து தனது ஒப்பற்ற பலத்தை நொடியில் இழந்தான். ஆதலின், இத்தகையோன் மேலே "பாண்டவரைக் கொல்லுதி" என்று முனிவனிடம் கூறியது அரசனது ஆணையின்படி யன்றி, அத்தகைய செயல்களை விழைந்த இயற்கைக் கொடூரத்தாலன்று.

இதன்முன் கன்னனது மனத்திண்மையைப்பற்றிக் கூறினேன். ஆனால் அத்திண்மைக்கு விரோதமெனத் தோற்றும்படி இவன் கண்ணனிடம் வசீகரப்படுவது நோக்கத்தக்கது. கண்ணன் தூதுசென்ற காலத்தில் அரசசபையைநண்ணுங்காலை யாவரும் சுயோதனன் கட்டளையையு மீறிக் கண்ணனை யெதிர்கொண்டனர். அப்போது, "கன்னனும் தலைகவிழ்ந்து இருந்தனன்; அழன்றுளம் சகுனி கருகினான்" என்று, மாயனிடம் கன்னன் வசப்படுவதைக் கவி வெகு நயமாகக் கூறுவார். கன்னன் உரவோனாதலின் ஏனோ அவ்வசீகரத்தைப் பொருட்படுத்தாமலிருக்கக் கூடாது? மேலும் விசுவரூப வருணனையில், "கங்கை மகன் கதிரோன் மகன் அம்பிகை காதன்மகன் தனயர் செங்கை குவித்த சிரத்தினரா யுணர்வொன்றிய சிந்தையராய்ப்" பணிந்ததாகக்கூறப்பட்டிருக்கிறது. பிறகு விசுவரூபம் ஒடுங்கியதும் நின்று உபசாரமுரைத்தவரில் கர்ணனே முதலாவதாகவுங் கூறப்பட்டிருக்கின்றது. அன்றியும் கண்ணனிடம் இவனுக்கிருந்த மதிப்பும் ஆர்வமும் உரைக்கப்பெருகும். துரியோதனனைப்போலல்லாமல் இவன் கண்ணன் திருமாலேஎன்னும்கொள்கையுடையோன். துரியோதனனது மற்றைக் கொடுஞ் செயல்களில் உடன்நினைத்தானெனினும் இவ்வொரு விஷயத்தில்மாத்திரம் வேறு நினைவினையுடையவன். பதினேழாம்நாட்போரில் அவன் கண்ணனை நெடுமாலாகக்கண்டது அவனுக்கு ஒரு வியப்பையும் விளைவிக்கவில்லை. அப்போது அவன் இட்ட புகழ்மாலை உண்மைப்பக்திமையால் பிறந்ததேயாம்.இதனாலேற்படுவ தென்னஎனின் சிரேஷ்டமானதும் அழகுள்ளதுமானவிஷயங்களில் கன்னனுக்கிருந்த பயமும் ஈடுபாடுமாகும். அவ்வச்சம் ஆண்மைக்கும் மனத்திண்மைக்கும் விரோதமென இகழ்தற்குரியதன்று. எவ்வுலகும்திருவடியின் மறைந்திட நின்றதோருருவத்தைக் கண்டு அஞ்சிப் பயந்து ஆசனம்பெயராதிருத்தல், கேவலம் கைதவச் செயலினோனாகிய சுயோதனனுக்கே பொருந்துவதன்றிக் கர்ணனுக்கு அது எவ்வாறு அமையும்? ஆங்கில ஆசிரியன் தாமஸ் ஹார்டி கூறியவாறு, 'தைரியம் பெருமைபடுகிறது; அதைப்போல் அச்சம் புகழ்பெறுவதில்லை. ஆயினும், அச்சமே உண்மைக்கு ஒத்ததும், ஆழ்ந்த உள்ளுணர்ச்சிகளைப் பற்றியதுமாகும்". ஆதலின் கன்னன்போர்வீரத்தைவிட அவனது அச்சமே அவனது மாண்பினைக்காட்டுவதாகும். ஆதலின்,மேற்கூறியது கன்னன்போர்வீரத்திற்கு முரணாகத் தோன்றினால் அது அவனது பண்பேற்றங்களிற் சிறந்த பாகத்தை வெளிப்படுத்துமன்றிப் பிரிதன்று. 'அஞ்சுவதோரு மறனே' என்பது குறள்.

கர்ணன் செருக்குமிக்கவனென்பது வில்லிபாரதத்தைப் படிப்பவர் எவர்க்கும் நன்கு விளங்குமென்று நினைக்கின்றேன். அவன் வீரனாதலின் போர்முனையில் வீறு கூறுவது ஏற்புடையதே என்று என் கூற்றைத் தள்ளமுடியாது. முதலாவதாகத் தற்புகழ்ச்சி எதிரி

களிடத்திலும், தன்னையறியாதோரிடத்திலுமே குற்றமாகாது. துரியோதனனது சபையில் மற்ற வீரர்கள் தற்புகழ்ச்சி செய்யாதபோது இவன் பெருமைபேசுவான். விதுரன் வில்லிறுத்தகாலை, "யானிருக்க இகல் விசயனைச் சென்று சீறி யுயிர்கொள்ள வல்லவர்கள் யாவரென்று நனிசெப்புவீர்" என்னவும், "சிவனும் என் கணையை அஞ்சும்" என்றுமிவன் கூறுகின்றான். அச்சபையில் அவனைவிடச் சிறந்தவீரர் இல்லாமற் போகவில்லை. கன்னன் பாந்தட்பகழி யுடையோனெனின், அசுவத்தாமனும் 'பாருருவித் திசையுருவும்' நாராயணாத்திரம் பெற்ற வரப்பிரசாதியல்லனோ? "அசுவத்தாமன் போரில் பன்முறை தோற்றோடுகிறானே" என்னின் கன்னன் மாத்திரம் அவ்வாறு தோல்வியுறவில்லையா? கன்னனுக்குக் கவசகுண்டலங்கள் உளவெனின் புரவித்தாமனது ஓர் அழியாவரத்தைப்பற்றியென் கூறுவது? சிலையாசிரியன் வன்மையும் அவன் போரில் புறந்தரும் பான்மையும் பண்டோர் கலாநிலயம் இதழில் 'உபநிடத முனிவன்' என்னும் கட்டுரையில் விளக்கப்பட்டன. முனைந்து நின்றக்கால் 'ஐய நின்னோடமர்திளைத்தல் அமரருக்கும் அரிது' என்று கிரீடியையும் வாய்விட்டரற்றச்செய்ததோடவன் பதினைந்தாம்நாட்போர் புரிந்ததையும் நோக்கின் சிலையாசிரியன் வன்மையைப்பற்றிப் பல கூறியென்? வீடுமனும் நிகரற்றவீரனென்பதில்ஐயமில்லை. மூன்றாம்நாட் போரில் சுயோதனன் கடோர்கசன் வேலால் சோகித்தபோது வீடுமன் வெகுண்டு போர்செய்ததைக் கண்டு விசயனும் வியப்பினால் வெல்லப்பட்டு அப்படியே தம்பித்து நின்றானல்லனோ? "கானெரிதுற்றென வீடுமன் இப்படிக்காதிமலைந்திடவும்" கண்ணனே தனது உரைமாறித் திருவாழியெடுத்தாரல்லவா? கடைநாட்போரில் அவன் கிரீடியைவிடச் சிறப்பாகப் போர்புரிந்ததை, "விருத்தன் வில் வளைத்த வாண்மை விசயனுக்குமிசையுமோ" என்பார் கவிஞர்.

இத்தகைய வீரரிருக்கும் அவையில் தற்பெருமையாக இவன் உரைப்பது வெற்றுரையேயாகும். இவனது அட்டகாசத்தை விளக்க இன்னும் சில உரைகளை அனுவதிக்கிறேன். "அம்பரத்தவருடன்றுபொர உன்னினும் ஓர் அம்பிலேயழிவர் திண்ணம்' என்றும், "எனக்கெதிர் விசயனல்லதில்லை யவ்விசயனென்பான் தனக்கெதிர் என்னையன்றித் தரணியர் யாருமில்லை." என்றும், 'அவன் (சல்லியன்) இன்றென் தேர் கடவுமாகில் அடலாழி யவனே யன்றிச் சிவன்வந்து தேர்விடினும் (அருச்சுனன் தன்னைச் செகுத்தல்) முடியுங்கொல்லோ' என்றும் கூறியிருப்பனவோடு இன்னும் இவன் பேசிய தன்மேம்பாட்டுரைகள் பல காணலாம். ஆனால் ஒருபோரிலாயினும் இவன் கிரீடியைச் செயித்திடக் கண்டிலேம்.

துரியோதனனுக்கு இவனிடமிருந்த பிரேமையே இவனது செருக்குக்கு ஒருவகையில் காரணமாயிருந்தது. தன்னுயிர்க் குறுதி பயக்கும் அத்துணை வீரரினும் கன்னனையே சுயோதனன் நம்பியதும் நோக்கத்தக்கது. பற்பலவிடங்களில், 'உதாரசீலன் உயர் அங்கர்கோன் வரிவில் ஒன்றுமே அமையும்' என்றும், "துணையாயென்னுயிர்க்கு உயிராம் தோழனுமாகிய வுன்னைத் தோற்றேனாகில் இணையாரும் இலாவரசேயாரைக்கொண்டரசாள இருக்கின்றேனே" என்றும் கன்னனைப் பாராட்டிச் சுயோதனன் கூறுகின்றனன்.

(தொடரும்)

நம்மாழ்வார் வைபவம்

திருவாய்மொழி

6-ம் பத்து 9-ம் தசகம்.

[487-வது பக்கத் தொடர்ச்சி]

7-ம் பாசுரம்.

உலகிற் றிரியுங் கரும கதியா யுலகுமாய்
உலகுக் கேயோ ருயிரு மானாய் புறவண்டத்
தலகில் பொலிந்த திசைபத் தாய வருவேயோ
அலகில் பொலிந்த வறிவி லேனுக் கருளாயே.

அவதாரிகை:—உலகினுள்ளனைவரும் அவரவர்க்கு ஒவ்வுகின்ற கருமங்களை அனுஸரித்துச் சுவர்க்கத்தை யடையவில்லையா? நீரும் உமக்கு இசைந்த கருமங்களைச்சுமந்து இயற்றி உம்பேற்றை யடையக்கூடாதா, என்ற சங்கையைப் பரிஹரிக்கிறார்.

சென்றபாசுரத்தில் எட்டாவது குறிப்பாக வரைந்துள்ளவைகளை இப்பாசுரத்திற்கு அவதாரிகையாகப் படிக்கவேண்டும்.

உரை:—உலகில் திரியும் - உலகத்தவர்கள் அனுஷ்டிக்கின்ற நடவடிக்கைகளாக உலாவுகின்ற, கருமங்களும் - யாகங்களும் தபஸுகளும், கருமகதியுமாய் - அந்த அந்தக் கர்மங்களால் அவரடைகின்ற பயன்களுக் கிலக்கான உபாயங்களுமாய், உலகுமாய்-அவற்றால் சேரும் புண்ணிய பூமிகளான சுவர்க்கம் முதலியனவாய், உலகுக்கே-அங்ஙனம்ஏகும் ஆத்மாக்களுக்கே, ஓர் உயிராய் - அருமையான அந்தராத்மாவாய், புறவண்டத்து - உலகத்துக் கப்புறமுள்ள அண்டங்களுக்கு, அலகில் பொலிந்த - கணக்கிடக்கூடாத பலவான, திசை பத்தாய்-பத்துத்திக்குக்களுமாய் இருக்கிற, அருவே - உன் ஞானத்தாலே சூழ்ந்து அவற்றை உணர்பவனாகஇருக்கின்றவனே- இது காமபந்தமாம் நிபந்தனைகள் முதலான கட்டுக்களால் தடைபடாத முக்த ஸ்வரூபியாயிருக்கின்ற ஆத்மாக்களுக்கும் அந்தராத்ம பூதனே, ஓ - ஓவென்று பகவானை விளிக்கிறபடி. அலகில் பொலிந்த அறிவிலேனுக்கு - அளவிடக்கூடாத அஞ்ஞானத்தால் மூடப்பட்டிருக்கும் அடியேனுக்கு, அருளாய் - உன்னைக் காட்டிகொடுத்துக் கிருபை செய்யவேண்டும்.

கருத்து:—மேலே செப்பியவையெல்லாம் உன் ஸங்கல்ப யத்நமன்றோ? ஆதலால் நான் செய்யவேண்டிய யத்நம் ஒன்றுங் கிடக்கவில்லையே. என் சுமதலையாக ஒன்றும் சாட்டாமல் உன் கிருபையாலே என் அபேக்ஷிதஞ் செய்தருளவேணும்- ஸர்வமும் உன்னதீநமாயிருக்க அதற்குப் புறம்போ யான்? நான் செய்வதென்று ஒரு காரியமுமில்லை; யானோஅறிவிலேன், முழுவது முன் கிருபையாலே நீயே முடித்தல்வேண்டும்.

8-ம் பாசுரம்.

அறிவி லேனுக் கருளா யறிவா ருயிரானாய்
வெறிகொள் சோதி மூர்த்தி யடியேன் நெடுமாலே
கிறிசெய்தென்னைப் புறத்திட் டின்னங் கெடுப்பாயோ
பிறிதொன் றறியா வடியே னாவி திகைக்கவே.

அவதாரிகை:-1"அருளாய்" என்றவாய்ப்பிறப்புப் புறப்பட்டவுடனே வந்தருளக் கண்டிலர் "தன் பக்கல்நின்றும் பிரிந்தென்னைக் கைவிடப்பார்த்தானாகாதோ" - என்கிறார் - (ஈடு முப்பத்தாறாயிரப்படி)

2. அதாவது அருளாயென்றபோழ்தேதம்மபேக்ஷிதம் பெறாமையாலே இன்னம் என்னை யகற்றி அப்புறப்படுத்தப்புகுகிறாயன்றோ-இருபத்துநாலாயிரப்படி.

உரை :—முதல்அடி-என்னை யுள்ளபடி அறிவார்க்கன்றோ நான் என்னைக்காட்டிகொடுப்பது. அறிவாருயிரானாய் - உன்னையறியத்தக்கவர்களுக்கு நீயே, வெறிகொள்ஜோதி - உன்னுடைய ஆச்சரியமான அதிசய ஜோதிமயமான வடிவழகுத் திருமேனியைக் காட்டிக் கொடுத்துஅவர்களுக்குத் தாரகனாயிருப்பவனே,அருளாய்-கேவலம் கிருபையாலே எனக்குக் காட்டியருளவேணும்; உன் அத்தியந்த பக்தர்களுக்கு நீ மிகவும் பிரியமுள்ளவனென்றும் அதுபோலவே அவர்களும் உனக்குப் பிரியமானவர்களென்றும் வாக்களித்திருக்கிறாய் - (பகவத்கீதை 7-ம் அத்தியாயம் 17-வது சுலோகம்) ஆகையால் அவர்களுக்கு உன்னைக்காட்டிக் கொடுப்பது நியாயமும் கடமையும் ஆகும். மற்று, அவர் கிடக்க, உன்னை எனக்குக் காட்டிகொடுப்பதல்லவோ பொருளும் உனது அருளும் ஆகும் - என்று விண்ணப்பம் செய்ய ; உடனே வரக்காணாமையாலே அதிமாத்திரம் பயபட்டவராய், இவ்வாழ்வார் மீண்டும், அடியேன் - தாஸனான எனக்கு, நெடுமாலே - கிட்டுதற்கு அரியனான பெரியோனே, பிறிதொன்றறியா - நீயே சரணமும் உன்னையடைவதற்கு நீயேதான் உபாயமுமென்றபகுத்தறிவுமாத்திரமல்லாமல் வேறே ஒன்று மறியாத, அடியேன் - உன்னுடைய ஆளாகிய என், ஆவி-உயிரகத்துள்ள மனமானது, திகைக்கவே- மேல்கண்ட பகுத்தறிவுங்கூடக் கெட்டுப்போய்க் கலங்கும்படி, கிறி செய்து - ஓர் உபாயத்தைப்பண்ணி (இந்திரியங்களின் விஷயத்துக்காளாக்கி - கிறி-இங்கு வஞ்சிக்கிற உபாயம் - தன்னைக் காட்டாதே பகவான் வஞ்சனை செய்கிறதாகக் குற்றம் சாட்டுகிறார்) இன்னம் அநாதிகாலந்தொட்டு உன்னை இழந்திருந்து இப்போழ்தே உன்னைக்கிட்டி ஒருவாறு நல்ல அநுபவம் கண்டவனை, புறத்திட்டு - நெருங்கவொட்டாமலகற்றி, கெடுப்பாயோ - கெடுக்கவோ பார்த்தருள்கிறாய்!

9-ம் பாசுரம்.

ஆவி திகைக்க வைவர் குமைக்குஞ் சிற்றின்பம்
பாவி யேனைப் பலநீ காட்டிப் படுப்பாயோ
தாவி வையங் கொண்ட தடந்தா மரைகட்கே
கூவிக் கொள்ளுங் கால மின்னங் குறுகாதோ.

பதக்குறிப்புக்கள்:—ஐவர் - பஞ்சேந்திரியங்கள், குமைக்கும் - பீடிக்கும் - ஒவ்வொன்றும் தன் விஷயத்தை உருசியோடநுபவிக்கக்கொடு என்று தூண்டுதல்; படுப்பாயோ - தரைப்படுத்துவாயோ - அவ்விஷயங்களின் அனுபவம் சுவல்பம் அஸ்திரம், துக்கங்களோடு இயைந்தவைகள், ஞானவிசாலத்துக்கு ஹானி-ஆகையால் புருஷார்த்தமல்ல.

பொழிப்புரை.—"சப்தாதி விஷயங்கள் உலகத்தார் நாடும் புருஷார்த்தமன்றோ,அதை ஏன் வெறுக்கவேண்டுமென்ன - அதுஎனக்கு ருசிக்காது,அந்தச்சுகம் போல்தோற்றுகின்ற விஷயங்களைக் காட்டி உன்னை இழப்பித்து என்னைத் தரைப்படுத்தாதே, உலகமெல்லாம் நிறையும்படி அன்று வளர்ந்த திருவடிகளாகிற தாமரைத் தடாகத்திலே என்னை வாங்கியருள் - என்றபேக்ஷிக்க, அப்போதே செய்தருளாமையாலே அக்காலம் வந்தால் செய்கிறோமென்றானாக்கொண்டு அக்காலம், இக்காலமெல்லாம் முடிந்தாயினும் வரக்கடவதன்றோவென்று கூப்பிடுகிறார்.—ஆறாயிரப்படி.

விசேஷக்குறிப்பு:—ஸ்ரீராமாநுஜ முனியின் பிரதம சிஷ்யரும், திருவாய்மொழிக்கு முதல்முதல் உரையிட்டவருமான ஆசான் திருக்குருகைபிரான் பிள்ளான் வயதுமுதிர்ந்ததசையில் மிக்க நோவு சாத்திக்கொண்டு தேஹபீடையுடையவராய் வருந்தும்போது அவரை உசாவப்போன பின்னொரு ஆசானான நஞ்சீயர் கேட்க, பிரான்பிள்ளான் "கூவிக்கொள்ளுங்காலம்இன்னம்குறுகாதோ" என்ன, நஞ்சீயர்ஆப்தரானவரை இழப்போமோ வென்ற சங்கையினால் மனக்கிலேசப்பட்டு அழ, "யாம் செல்லுமிட மிதிலும் தாழவோ; சீரியதன்றோ" வென்று தேறுதல் சொன்னதாக ஈட்டுரையில் குறித்திருப்ப தறியத்தக்கது.

கலாநிலயம் முன்னைய வால்யூம்கள்

1928, 1930, 1931, 1932, 1933 வருடத்திய வால்யூம்கள் எம்மிடம் கிடைக்கும். ஆயினும் இன்னும் மிகச் சிலவே இருக்கின்றன. வேண்டுவோர் உடனே பெற்றுக்கொள்வது நலம்.

ஒவ்வொரு வால்யூமின் விலை—பைண்ட் செய்யாதது. ரூ. 7-8-0. ஆப்லெதர்-கில்ட் பைண்ட் செய்தது ரூ. 9-0-0. தபால் அல்லது ரயில் பார்ஸல் கட்டணம் வேறு.

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட்ஸ் நஞ்சன்கூடு "சத்வைத்யசாலை" மருந்துகள்
"ஆல்மண்டைன்" (டானிக்). "பாலக்ஸ்" பேதிமாத்திரை. "ஸ்ப்ளிவரால்" (குழந்தை கட்டிக்கு)
சுமார் 300 போலிகள் ஏமாற்றும்.
நஞ்சன்கூடு பல்பொடி
சாதாரணமை-பாக்கெட் (ரிஜிஸ்தர் செய்தது) டப்பி
தயவுசெய்து கவனித்து வாங்கவும்.
சத்வைத்யசாலை - நஞ்சன்கூடு
காஸ்ட்ராலகஸ்
ஜ்வரேக்
[பஸ்மங்கள் வைத்தியர்களுக்கு மட்டும்] [அட்வான்ஸுடன் ஆர்டர் செய்ய...]

199182
M211,N28KN
N34.732

KALANILAYAM
REG. NO. M. 2324.

வர்த்தமானம்

அமெரிக்காவில் தெய்வநாட்டம்:—தெய்வம்என்பதோர் சித்தம் ஆதியில் தோன்றிய நமது நாட்டிலே இப்பொழுது நாஸ்திகம்தோன்றியிருக்கிறது. ஆனால் நாஸ்திகத்திலே வளர்ந்துவந்த அமெரிக்காவிலே கடவுள் நாட்ட (Turn to God Movement) இயக்கமொன்று தோன்றி வளர்ந்து வருகிறது.

* * *

பூனை அரசன்:—உலகத்திலேயே மிகவும் பெரிய பூனை தென் லண்டனில் வசித்து வருகின்றதாம். இதற்கு எட்டு வயதாகின்றதாம். அது 35 பவுண்டு கனமுள்ளதா யிருக்கிறதாம். இதனுடைய சரிதை புத்தக ரூபமாய் வெளிவந் திருக்கிறதாம். இது பசு மாமிசமும் தண்ணீரும் தவிர வேறெதுவும் சாப்பிடுவதில்லையாம். இதனுடைய பெயர் கிப்ஸன்என்பதாம்.

* * *

வாயெல்லாம் பல்:—கான்ஸாஸ் நகரத்தில் மிஸ். மார்தா லார்ஸன் என்ற ஸ்திரீ பல்வலிக்கிறதுஎன்று கூறி, ஒரு பல் வைத்திய நிபுணரிடம் சென்றாள். அவர் அவள் வாயைப் பரிசோதனை செய்து பார்த்தபோது வாயெங்கும் புண்ணுயிருந்ததை அவர் கண்டார். எனவே அவள் வாயை எக்ஸ்ரே படம் பிடித்துப் பார்த்தபோது, வாயின் மேற்பகுதியிலும் ஈறுகளிலும் ஏராளமான சிறு பற்கள் முளைத்திருப்பது தெரிந்ததாம். அதற்குமேல் சிகிச்சை செய்ய ஆரம்பித்த டாக்டர் அவள் வாயில் சாதாரணமாக இருக்கவேண்டிய 32 பற்களை மட்டும் விட்டுவைத்து, அதிகமாயிருந்த 200 பற்களைப் பிடுங்கிவிட்டாராம்.

மாதம் பதினாயிரம்:—அமெரிக்காவில் நியூயார்க் நீதி ஸ்தலத்தில் ஹூவலி காட்டன் தாமஸ் என்றஏழு வயதுச் சிறுமி மாதம் மூவாயிரம் டாலர் (பதினாயிரம் ரூபாய்) தனது செலவுகளுக்குப் போதாதென்று தன்தாயாரின்மூலம் வழக்குத்தொடுத்திருக்கிறாள்.

* * *

பெண் நாடு:—துருகி ஸ்தானத்தில், மலேசியா துருக்கி யென்ற நாட்டில் எல்லா வேலைகளையும் மாதர்களே செய்கிறார்களாம். செல்வர்களான பெண்கள் பல ஆடவர்களைத் தங்கள் அந்தப் புரங்களில் வைத்துக்கொண்டிருக்கிறார்களாம்.

* * *

வண்ணாத்திப் பூச்சி சேகரம்:—உலகத்திலுள்ளவித விதமான வண்ணாத்திப் பூச்சிகளைக் குவியல் குவியலாகத் திரட்டி வைத்திருப்பவர் ஸ்விட்சர்லாந்தைச் சேர்ந்த கான்ஸ் ப்ரூட்டார்பா என்ற விநோத மனிதராம். அவர் இதுவரை ஒரு லட்சம் வண்ணாத்திப் பூச்சிகளைத்திரட்டிவைத்திருக்கிறாராம். அவர் இவைகளைத் தனது இருபத்திரண்டாவது வயதிலிருந்தே திரட்டிக்கொண்டுவருகிறாராம். மூன்று வருஷங்கள் ஜாவாவில் பல வண்ணாத்திப் பூச்சிகளைத் திரட்டினாராம். மலாய் நாட்டில் இரண்டுவருடம் இவைகளைச் சேகரிக்க முயன்றாராம். இவைகளைத்திரட்டத் தென்னமெரிக்கா, ஜப்பான், சீனா சையாம் முதலிய நாடுகளில் பிரயாணம்செய்தாராம். இவர் திரட்டியிருக்கிற வண்ணாத்திப் பூச்சிகளில் ஏழாயிரம் விதமான பூச்சிகள் இருக்கின்றனவாம்.

NATIONAL
INSURANCE COMPANY, LIMITED.
Head Office :
NATIONAL INSURANCE BUILDING,
362, China Bazar Rd, Esplanade, Madras.

1933 Results.

New Business Completed exceeds ... ... Rs. 1,67,00,000
The Company with a steady progress all round.
All forms of life assurance policies issued at low safe rates of premium.

Specialities.

Female Lives
Joint Lives
Permanent Protection Policies
Triple Benefit Policies.
Marriage & Future Provision Policies.
For agencies please apply to:—

Branch Secretary, 362, China Bazar Road, Esplanade, Madras. OR R. G. DAS & Co., Managers.

Consult
NATIONAL FIRE
AND
GENERAL INSURANCE COMPANY Ltd.,
Head Office:—
NATIONAL INSURANCE BUILDING,
362, China Bazar Rd, Esplanade, Madras.
for Fire, Motor & Accident policies.

A sound Company.
Please apply for particulars to:—

Branch Secretary, 362, China Bazar Road, Esplanade, Madras. OR R. G. DAS & Co., Managers.

யுனைடெட் இந்தியா
லைப் அஷ்யுரன்ஸ் கம்பெனி, லிமிடெட், சென்னை.
ஹெட் ஆபீஸ்:—சென்னை. 1906ஞ ஸ்தாபித்தது.
யுனைடெட் இந்தியாவில், லைப் இன்ஷூயரன்ஸின் சிறந்த பயன்கள் குறைந்தசெலவில் கிடைக்கும்.
யுனைடெட் இந்தியாவில் பாலிஸி எடுத்துக்கொள்வது மிகச்சிறந்தஇன்வெஸ்ட்மெண்டும்,வயது காலத்திற்கும் குடும்பத்திற்கும் இணையற்ற ஆதரவும் ஆகும்.
யுனைடெட் இந்தியாவே, தென்னிந்தியாவில் மற்றெல்லாக் கம்பெனிகளுக்கும் முன்னால் ஸ்தாபித்தது.
யுனைடெட் இந்தியா முற்றிலும் பத்திரமானதும் கெட்டிதிட்ட முடையதும் ஆன கம்பனி.
ஹெட் ஆபீஸ்:— செம்புதாஸ் தெரு, சென்னை. அல்லது இந்தியா, பர்மா, ஸிலோனில் உள்ள பிராஞ்சுகள்
இவைகளுக்கு எழுதி முழு விவரமும் இது பற்றிய பிரசுரங்களும் பெற்றுக்கொள்ளலாம்.

இந்தியா தேசத்து இணையற்ற இரத்தினம்
ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்
தேக பலத்தையும், இரத்த விருத்தியையும், ஞாபக சக்தியையும், தாது புஷ்டியையும் கொடுப்பதில் நிகரற்ற ஔஷதம். சென்ற 53வருஷங்களாக இலட்சக்கணக்கான ஜனங்களால் உபயோகிக்கப்பட்டு வருகின்றன.
32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு விலை ரு. 1
இனும்! இனும்!!
"இன்பவாழ்க்கையாலடைந்த சக்தி"
இனமாகவும் தபாற்செலவில்லாமலும் அனுப்பப்படும்.
ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26 பிராட்வே, மதராஸ்.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)